09.12.15

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தெற்கே 2 நாட்களுக்கு கன மழை

சென்னை: 'தமிழக கடலோர மாவட்டங்கள், தென் மாவட்டங்கள், உள் மாவட்டங்களில், இரு நாட்களுக்கு மிக கனமழை பெய்யும்; சென்னையில், கன மழைக்கு வாய்ப்பில்லை' என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் பாலச்சந்திரன் கூறியதாவது: காற்றழுத்த தாழ்வு நிலைவங்கக் கடலில், லட்சத் தீவு மற்றும் மாலத்தீவு பகுதிகளில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை, லட்சத்தீவு மற்றும் குஜராத் கடற்பகுதி அருகே நிலை கொண்டுள்ளது. புதிதாக உருவான காற்றழுத்த தாழ்வு நிலை, தென்மேற்கு வங்கக் கடலில், வட தமிழகம் மற்றும் இலங்கை அருகே, காற்றழுத்த தாழ்வு நிலையாக நீடிக்கிறது.இதனால், நேற்று முன்தினம் மற்றும் நேற்று காலை, 8:30 மணி நேர நிலவரப்படி, 24 மணி நேரத்தில், தமிழகம், புதுச்சேரியில், பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்துள்ளது.பெரும்பாலான இடங்களில் அடுத்த 24 மணி நேரத்திற்குள், கடலோர மாவட்டங்களில், பெரும்பாலான இடங்களிலும், பிற மாவட்டங்களில், சில இடங்களிலும், மழைக்கு வாய்ப்பு உள்ளது.

**மழை நிலவரம்**

| இடம் | செ.மீ., |
|---|---|
| காரைக்கால் | 16 |
| நெல்லை | 13 |
| பாபநாசம் | 13 |
| திருவாரூர் | 11 |
| நாகை | 11 |
| தஞ்சாவூர் | 5 |
| கன்னியாகுமரி | 4 |
| புதுக்கோட்டை | 4 |
| ராமநாதபுரம் | 4 |

நேற்று காலை, 8:30 மணி நேர நிலவரப்படி 24 மணி நேரத்தில்

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் தவிர்த்து, பிற மாவட்டங்களில், ஓரிரு இடங்களில், கனமழை, மிக கன மழை பெய்யக்கூடும்; இரு நாட்களுக்கு மழை இருக்கும்.சென்னையில், வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; ஒருசில இடங்களில், விட்டு விட்டு மழை பெய்யும். இவ்வாறு அவர் கூறினார்.

## சத்துணவு மையங்களுக்கு 750 டன் பயறு கொள்முதல்



சத்துணவு மையங்களுக்கு, 750 டன் பயறு வகைகள் வாங்க, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் முடிவு செய்துள்ளது.தமிழகத்தில், பள்ளிகளில் உள்ள சத்துணவு மையங்களில், மாணவ, மாணவியருக்கு, வேக வைத்த கறுப்பு கொண்டை கடலை; பச்சை பயறு தலா, 20 கிராம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், பயறு வகைகளை கொள்முதல் செய்து, சத்துணவு மையங்களுக்கு சப்ளை செய்கிறது. தற்போது பெய்த கன மழையால், சத்துணவு மையங்களில் இருந்த, பருப்பு வகை அனைத்தும் பாழாகி உள்ளன. இதையடுத்து, மூன்று கோடி ரூபாய்க்கு, 550 டன் கொண்டை கடலை; 50 லட்சம் ரூபாய்க்கு, 200 டன் பச்சை பயறு வாங்க, வாணிப கழகம் முடிவு செய்துள்ளது.

### விவசாயிகள் கூட்டமைப்பிற்கு தமிழர் தலைவர்

-தேசிய அளவில், மிகப்பெரிய விவசாய அமைப்பாக, இந்திய விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவராக, கடந்த நான்காண்டுகளாக, பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த சத்ராம் சிங் பேரு என்பவர் இருந்தார். இவர் பதவி காலம் முடிந்ததை அடுத்து, விருத்தகிரி, போட்டியின்றி தேர்வாகி உள்ளார்.இவர், கடலூார் மாவட்டம், விருத்தாசலத்தைச் சேர்ந்தவர். இதுவரை, இந்த கூட்டமைப்பின் தமிழக பொதுச் செயலராக இருந்தார்.

### பெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடியில் நிலைநிறுத்த முயற்சி




கூடலூார்:பெரியாறு அணை நீர்மட்டம் நேற்று முன்தினம் இரவு 142 அடியை எட்டியது. இதனால் தமிழகப்பகுதிக்கு 2000 கன அடியும் அணையை ஒட்டியுள்ள 8 ஷட்டர்கள் மூலம் கேரள பகுதிக்கு 3000 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்நிலையில் அணையின் நீர்மட்டம் நேற்று காலையில் 141.70 அடியாக குறைந்தது. இதனால் கேரள பகுதிக்கு நீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டது. லோயர்கேம்பில் மின் உற்பத்திக்காக ராட்சத குழாய் மூலம் 1400 கன அடியும் இறைச்சல் பாலம் வழியாக 513 கன அடியுமாக மொத்தம் 1913 கன அடிநீர் தேக்கடி ஷட்டர் வழியாக தமிழக பகுதிக்கு திறந்து

விடப்பட்டது. இந்நிலையில் நேற்றுஅணைப்பகுதியில் பலத்த மழை பெய்ததால் நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் 142 அடியைக் கடந்து விடும் என்பதால் நேற்று மாலை மீண்டும் அணையை ஒட்டியுள்ள 3 ஷட்டர்களை திறந்து வினாடிக்கு 650 கன அடி வீதம் தண்ணீர் கேரள பகுதிக்கு வெளியேற்றப்பட்டது. இது குறித்து இடுக்கி கலெக்டருக்கு தமிழக பொதுப்பணித்துறையினர் அவ்வப்போது தகவல் அனுப்பி வருகின்றனர். நீர்வரத்தை பொறுத்து அவ்வப்போது தமிழகப்பகுதிக்கும் கேரள பகுதிக்கும் நீரை வெளியேற்ற வேண்டியுள்ளதால் செயற்பொறியாளர் மாதவன் தலைமையில் பொதுப்பணித்துறையினர் அணைப்பகுதியில் முகாமிட்டு கண்காணித்து வருகின்றனர். கலெக்டர்கள் ஆய்வு அணையில் இருந்து நீர் வெளியேற்றம் குறித்தும், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் தேனி கலெக்டர் வெங்கடாசலம், இடுக்கி கலெக்டர் ரதீசன் ஆகியோர் நேற்று மாலை கூட்டாக சென்று அணைப்பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது கேரள நிருபர்களை மட்டும் அழைத்துச் சென்றனர்.

**குமரி அணைகளில் நீர் வெளியேற்றத்தால் அபாய எச்சரிக்கை**



நாகர்கோவில்:குமரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவில் தொடங்கிய மழை நேற்று முழுவதும் பெய்தது. பேச்சிப்பாறை அணையில் இருந்து உபரி நீர் அதிக அளவில் திறக்கப்பட்டுள்ளதால் குழித்துறையாறு பகுதிகளில் வெள்ள

அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.கொட்டாரம், மயிலாடி, சுருளோடு, ஆரல்வாய் மொழி, இரணியல், ஆனைகிடங்கு, குளச்சல், அடையா மடை, முள்ளங்கினாவிளை, திருவட்டார், குலசேகரம், அருமனை, மார்த்தாண்டம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளிலும் விடிய விடிய மழை பெய்தது. கொட்டாரத்தில் அதிகபட்சமாக 43.6 மி.மீ. மழை பதிவானது. மலையோர பகுதியான பாலமோர் மற்றும் அணை பகுதிகளில் பெய்து வரும் கனமழையால், பேச்சிப்பாறை அணைக்கு வரக்கூடிய நீர் வரத்து கணிசமாக உயர்ந்தது. இதனால் அணையின் நீர்மட்டம் 46.32 அடியாக உயர்ந்தது. இதை தொடர்ந்து நேற்று காலை அணையை பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆய்வு செய்த பின்னர் 2000 கனஅடி உபரி நீர் திறக்கப்பட்டது. அணைக்கு 1307 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 75.09 அடியாக இருந்தது. அணைக்கு 394 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 354 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. முன் எச்சரிக்கை நடவடிக்கையாக குழித்துறை ஆற்றின் கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர். கோதையாற்றில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. திற் பரப்பு அருவியிலும் வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. சிறுவர் பூங்காவை தாண்டி தண்ணீர் கொட்டி வருகிறது. அருவியில் குளிப்பதற்கு சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. குழித்துறை ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் களியல், தேங்காய் பட்டணம் மற்றும் கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்கின்றனர்.குமரி மாவட்ட பள்ளி கல்லூரிகளுக்கு நேற்று விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.

**பெரியாறு அணை நீர்வரத்தால் வைகையில் நீர்மட்டம் உயர்வு**

ஆண்டிபட்டி,: முல்லை பெரியாறு அணையில் இருந்து நீர் வரத்து அதிகரித்துள்ளதால், வைகை அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறதுதேனி மாவட்டத்தில் தொடரும் வடகிழக்கு பருவமழையால் உயர்ந்து வந்த வைகை அணை நீர் மட்டம் நவ., 28ல், 68.57 அடியை எட்டியது. அப்போது மதுரை,

திண்டுக்கல், ராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட பாசனத்திற்கு திறந்து விடப்பட்டது. அதன்பிறகு அணையின் நீர் மட்டம் 64.30 அடி வரை குறைந்தது.இந்நிலையில் கடந்த 2 நாட்களாக பெரியாறு அணையில் இருந்து அதிக அளவு நீர் திறந்து விடப்பட்டுள்ளதாலும், வைகை அணை நீர் பிடிப்பு பகுதியில் மழை தொடர்வதாலும் அணைக்கான நீர் வரத்து நேற்று மாலை 5 மணிக்கு வினாடிக்கு 5047 கன அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து பாசனம் மற்றும் குடிநீருக்காக வினாடிக்கு 4060 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நேற்று மாலை அணை நீர் மட்டம் 64.86 அடியாக இருந்தது.

**வெள்ளத்தில் தத்தளிக்கும் நாகை**

நாகப்பட்டினம் : நாகை மாவட்டத்தில், கடந்த ஒரு மாதமாக மழை பெய்து வரும் நிலையில், நேற்று முன்தினம் காலையில் இருந்து பலத்த மழை கொட்டி வருகிறது. இதனால், மாவட்டம் முழுவதும் வெள்ளத்தில் தத்தளிக்கிறது. ஆறுகளின் கரைகளை தொட்டுக் கொண்டு சீறிப்பாயும் வெள்ளம், பல கிராமங்களில் உட்புகுந்துள்ளது. குளங்கள், ஏரிகள் அனைத்தும் நிரம்பி வழிவதால், குடியிருப்பு பகுதிக்குள் தண்ணீர் புகுந்துள்ளது. வீடுகளை விட்டு வெளியில் வர முடியாமல் மக்கள் தவித்து வருகின்றனர்.நாகை மாவட்டத்தில், கன மழைக்கு, ஐந்து பேர் இறந்துள்ளனர்.

**காஞ்சியில் மூன்று மாதங்களில் கொட்டித் தீர்த்த மழை**

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஓராண்டு பெய்ய வேண்டிய சராசரி மழையளவு என்பது, 1,161 மி.மீட்டர். ஆனால், வடகிழக்கு பருவமழை துவங்கிய கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து, நேற்று வரையிலான கணக்கெடுப்பில்(3 மாதத்திற்குள்), 1,668.52 மி.மீட்டர் மழை பொழிந்துள்ளது.

**ரேலியா அணை நிரம்பியது**

குன்னூர்,:குன்னூர், ரேலியா அணை நிரம்பியது;உபரிநீர் வெளியேற்றப்படுகிறது. குன்னூர் நகராட்சிக்கு உட்பட்ட, 15 வார்டுகளுக்கும்,

ரேலியா அணையில் இருந்து தான் குடிநீர் வினியோகிக்கப்படுகிறது. பரவலாக பெய்து வரும் மழையால், அணை நிரம்பியுள்ளது. அணையின் மொத்த அளவான, 43.6 அடிக்கு, தண்ணீர் நிரம்பியதால், உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. 'தடுப்பணை கட்டி, வெளியேறும் உபரிநீரை சேமித்தால், வறட்சி காலங்களில் தண்ணீர் தேவை ஓரளவுக்கு பூர்த்தியாகும்' என்கின்றனர், இப்பகுதி மக்கள்.

**சென்னையில் மீண்டும் மழை**

சென்னை : சென்னை-எழும்பூர், சென்ட்ரல், அண்ணாசாலை, வடபழனி, கிண்டி, சூளைமேடு, பட்டாபிராம் உள்ளிட்ட பகுதிகளில் தற்போது மீண்டும் மழை பெய்ய துவங்கியுள்ளது.

**தாமிரபரணியில் வெள்ளப்பெருக்கு: வீடு-க-ளுக்குள் தண்-ணீர்**



திருநெல்வேலி:திருநெல்வேலி மாவட்டத்தில் தொடர்ந்து கன மழை பெய்து வருவதாலும், தாமிரபரணி ஆற்றில், வினாடிக்கு, 30 ஆயிரம் கன அடி நீர் திறப்பதாலும், நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.திருநெல்வேலி மாவட்டத்தில், அக்டோபர் துவக்கத்திலேயே, வட கிழக்கு பருவ மழை பெய்யத் துவங்கி விட்டது. இதனால், நெல்லை மாவட்டத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப்

பகுதியில் அமைந்துள்ள, கடனா நதி, ராம நதி, கருப்பா நதி, அடவிநயினார், குண்டாறு, சேர்வலாறு அணைகள் ஏற்கனவே நிரம்பி விட்டன. சமீபத்திய கன மழையால், பாபநாசம் அணை நீர் மட்டம், முழு உய-ர-மான, 142 அடியை எட்டியது. நேற்றும், அதிகபட்சமாக, பாபநாசத்தில், 129 மி.மீ., மழை பதிவானது. இதனால் அணைக்கு, வினாடிக்கு, 12 ஆயிரம் கன அடி தண்ணீர் வரத்து இருந்தது; அணைக்கு வரும் தண்ணீர் தாமிரபரணியில் திறக்கப்பட்டது.ஏற்கனவே, நிரம்பி விட்ட சேர்வலாறு அணைக்கு வந்த, 6,000 கன அடி நீரும், தாமிரபரணியில் வெளியேற்றப்பட்டது. அதுபோல, கடனா நதி, ராம நதி அணைகளின் உபரி நீரான 3,000 கன அடியும் தாமிரபரணியில் விடப்பட்டது. அத்துடன் மழை நீரும், சிறிய கால்வாய்களில் இருந்து வரும் தண்ணீரும் சேர்ந்து, தாமிரபரணியில், வினாடிக்கு, 22 ஆயிரம் கன அடி நீர் செல்கிறது.இதனால், நெல்லையில், ஆற்று கரையோர குடியிருப்புகளான கைலாசபுரம், மீனாட்சிபுரம் பகு-திகளில் வீடுகளுக்குள் தண்ணீர் சென்றது. அங்கிருந்தவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

## தாமிரபரணி ஆற்றில் வெள்ள பெருக்கு மீன் பிடிக்க சென்றவரை அடித்து சென்றது

தூத்துக்குடி,: தூத்துக்குடி மாவட்டம் ஏரல் தரைப்பாலத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவரை வெள்ளம் அடித்து சென்றது. அவரது உடலை தேடி வருகின்றனர்.தாமிரபரணி ஆற்றில் வெள்ள பெருக்கு ஏற் பட்டுள்ளது. மணிமுத்தாறு, பாபநாசம், சேர்வலாறு ஆகிய மூன்று அணைகளும் முழு கொள்ளளவை எட்டியுள்ளதால், உபரி நீர் தாமிரபரணி ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது. வினாடிக்கு 40 ஆயிரம் கன அடி நீர் செல்கிறது. ஸ்ரீவைகுண்டம் தடுப்பணையில் இருந்து வினாடிக்கு 27 ஆயிரம் கன அடி நீர் சென்று கொண்டிருக்கிறது. ஏரல் பகுதியில் உள்ள தரைப்பாலம் மூழ்கும் வரை வெள்ள நீர் கடலுக்கு சென்று கொண்டிருக்கிறது.குச்சிக்காடு பகுதி பால்குளத்தை சேர்ந்த சுடலைமணி மகன் செல்வக்குமார்,28. இவர் தனது நண்பர்கள் இருவருடன் ஏரல் தரைப்பாலத்தில் மீன் பிடித்துகொண்டிருந்த போது வெள்ளம் இழுத்து சென்றது. இவரது உடலை காணவில்லை.

ஸ்ரீவைகுண்டம் தீயணைப்புத்துறையினர் அவரது உடலை தேடி வருகின்றனர். செல்வக்குமாருக்கு செல்வி என்ற மனைவியும், மூன்று பெண் குழந்தைகளும் உள்ளனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

**வெள்ளத்தில் தத்தளிக்கும் தொழிற்சாலைகள் ரூ.20,000 கோடி 'அவுட்!'**



தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகளில், 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக தொழில் நிறுவனங்களை சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். கன மழையால் சென்னை, காஞ்சி, திருவள்ளூர், கடலூார், விழுப்புரம் மற்றும் துாத்துக்குடி மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. சிறு தொழிற்சாலைகளில் பணிபுரியும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். நவம்பரில் பெய்த மழையால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து, மீள முடியாமல் தொழிற்சாலைகள் தவித்த நிலையில், டிச., 1ல் பெய்த பேய் மழையில், ஆயிரக்கணக்கான சிறு தொழிற்சாலைகள், உபகரணங்களை இழந்துள்ளன. காஞ்சி, திருவள்ளூர் மாவட்டங்களில், உள்ள வாகன தயாரிப்பு நிறுவனங்கள், ஐ.டி., எனப்படும், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், ஒரு வாரமாக முடங்கிக் கிடந்தன. 'மழை காரணமாக, 15 ஆயிரம் கோடி ரூபாய்க்கு அதிகமாக இழப்பு ஏற்பட்டிருக்கும்'

என, 'அசோசெம்' எனப்படும், தொழில் அமைப்பு மதிப்பிட்டுள்ளது. தமிழக தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், 'பாதிப்பு, 20 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக இருக்கும்' என, தெரிவித்துள்ளனர். தொழிற்பேட்டைகளில் கழிவு நீர் தேங்கியிருப்பதால், நோய் தொற்றும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்களை சேர்ந்தோர் கூறியதாவது:'டான்ஸ்டியா' எனப்படும், தமிழ்நாடு சிறு, குறுந்தொழிற்சாலைகளின் தலைவர் முத்துசாமி:வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிறுவனங்களில், சி.என்.சி., எனப்படும் கணினியுடன் கூடிய இயந்திரங்கள் முழுவதுமாக பாதிக்கப்பட்டுள்ளன. சேறும், சகதியும் புகுந்ததால், மீள முடியாத அளவுக்கு பழுதடைந்துள்ளன. அவற்றின் பாதிப்பு மட்டும் ஆயிரம் கோடி ரூபாயை தாண்டும். இது தவிர, உற்பத்தி இழப்பு மட்டும், 900 கோடி ரூபாயை தாண்டும். பாதிக்கப்பட்ட நிறுவனங்கள், 15 - 20 நாட்கள் வரை இயங்காமல் உள்ளன. வெள்ள நீர் இன்னும் முழுமையாக வடியாததால், முழுவீச்சில் மீண்டும் இயங்க இன்னும், 20 நாட்கள் பிடிக்கும். அதனால், பொருளாதார பாதிப்பும் அதிகரிக்கும். எனவே, பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு வட்டியில்லா கடன் வழங்க வேண்டும். உபகரணங்களை புதிதாக வாங்க, சலுகை அடிப்படையில் வங்கிகள் உடனடியாக கடன் வழங்க வேண்டும்.

விற்பனை வரி கேட்டு, மாநில அரசு, மூன்று மாதங்களுக்கு நிர்ப்பந்திக்க கூடாது. இ.எஸ்.ஐ., மற்றும், 'பிராவிடன்ட் பண்ட்' கட்டுவதில் சில மாதங்கள் தளர்வு அளிக்க வேண்டும். வங்கிகள் விஷயத்திலும், கலால் வரி செலுத்துவதில் சலுகை காட்டுவதிலும், மத்திய அரசு உதவ வேண்டும். அத்திப்பேடு ஏரியில் இருந்து தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. தொழிற்பேட்டையில் முழுவதுமாக நீர் வடியாததால், பணிகள் நடக்கவில்லை. 2,400 நிறுவனங்களுக்கு மேல் உள்ள இந்த இடத்தில், சில நிறுவனங்கள் மட்டுமே இயங்குகின்றன. குறைந்தது, 20 நாட்களுக்கு மேலாக நிறுவனங்கள் இயங்கவில்லை. இவர்களின், ஒரு நாள் இழப்பு, 25 - 30 கோடி ரூபாய். இன்சூரன்ஸ் நிறுவனத்தினர் பார்த்துவிட்டுச் சென்றனர். ஆனால், நல்ல தகவல் வருவது போல் தெரியவில்லை. பொதுப்பணித்துறை அதிகாரிகளை அனுப்பி,

அடுத்த ஆண்டிலாவது, இப்பிரச்னை ஏற்படாமல் தடுக்க திட்டம் தயாரிக்க வேண்டும்.

**திரிவிக்ரமன் சங்க தலைவர், அம்பத்துார் தொழிற்பேட்டை**

இங்குள்ள, 450 ஆலைகளில், 75 சதவீத நிறுவனங்களில் இன்னும் தண்ணீர் தேங்கியிருக்கிறது. மோட்டார் வைத்து நீரை வெளியேற்றி வருகிறோம். எங்களுக்கு உடனடியாக வங்கி கடன் தரவேண்டும். கடனுக்கான வட்டியை செலுத்துவதில் இருந்து சில காலத்துக்கு விடுப்பு அளிக்க வேண்டும். இது குறித்து சில வங்கிகளுடன் பேசியிருக்கிறோம். மாவட்ட தொழில் மையங்களில் சேத விவரங்களை தெரிவித்துள்ளோம். அரசு எங்களுக்கு உதவி புரிய வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர். இதுபோல், கடலுார் மாவட்டத்தில் நுாற்றுக்கணக்கான ஆலைகள்; காஞ்சி மாவட்டம், திருமுடிவாக்கம்; விழுப்புரம் மாவட்ட தொழிற்பேட்டைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

**கணேசன் 'டான்ஸ்டியா' அமைப்பின் தலைவர், துாத்துக்குடி**

மணலி - மீஞ்சூர் சாலை போடும்போது, விச்சூர்,'சிட்கோ எஸ்டேட்'டில் உள்ள கால்வாயை நெடுஞ்சாலைத் துறையினர் தடுத்து விட்டனர். தண்ணீர், ரெட்ஹில்ஸ் ஏரிக்கு போவதற்கு வழியில்லாததால், இப்பிரச்னை ஏற்பட்டது. அதை உடனடியாக சரி செய்ய வேண்டும். இங்கு, 150 - 200 கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. இங்கிருந்து தண்ணீர் வெளியேற வழிசெய்ய வேண்டும்.ஷபீக் தலைவர், திருவள்ளூர் மாவட்டம் விச்சூர்தொழிற்பேட்டை வெள்ளம் பாதித்த மாவட்டங்களில் உள்ள பெரிய தொழிற்சாலைகளிடமிருந்து பாதிப்பு விவரங்களின் பட்டியலை கேட்டிருக்கிறோம். அது வந்த பிறகு, தொகுத்து, அரசிடம் அளித்து நிவாரணம் கோரப்படும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். ரபீக் அகமது இந்திய தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பு, தமிழக தலைவர்

**பெரிய நிறுவனங்கள் கதி என்ன?**

'போர்டு, யமஹா, என்பீல்ட்' போன்ற ஆட்டோமொபைல் நிறுவனங்கள் உள்ளிட்ட பெரிய நிறுவனங்களில், 10 நாட்கள் வரை உற்பத்தி பாதிக்கப்பட்டது. சென்னை மற்றும் சுற்றுப்பகுதிகளில் உள்ள பெரிய ஆலைகளில் நாளொன்றுக்கு, 300 - 400 கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டிருக்கலாம். எனினும், சிறிய ஆலைகளுக்கு தான் பாதிப்பு அதிகம்.

**வடகிழக்கு பருவமழையால் சேதமடைந்தது 62 பாலங்கள்! 49,400 ஏக்கர் நெற்பயிர் நீரில் மூழ்கின**

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்டத்தில் பெய்த, வடகிழக்கு பருவமழையால், நெடுஞ்சாலை மற்றும் ஊரக வளர்ச்சி துறை கட்டுப்பாட்டில் உள்ள, 62 பாலங்கள் சேதமடைந்து உள்ளன; 49,400 ஏக்கர் நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

திருவள்ளூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழை கடந்த நவம்பர் மாதம் முதல், பெய்து வருகிறது. தொடர் மழை காரணமாக, ஆரணி, கொற்றலை, கூவம் ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. பூண்டி, புழல், சோழவரம் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகமாக இருப்பதால், உபரி நீர் திறக்கப்பட்டது. பாலங்கள் சேதம் ஊத்துக்கோட்டை, தாமரைப்பாக்கம், பெரியபாளையம், பொன்னேரி உள்ளிட்ட பகுதிகளில், ஆற்றின் கரையோரம் உள்ள குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. இதன் காரணமாக, மாவட்டம் முழுவதும் பலத்த சேதம் ஏற்பட்டது.மாவட்டத்தில் முக்கிய சாலைகளான, திருவள்ளூரில் இருந்து, செங்குன்றம், ஆவடி, ஸ்ரீபெரும்புதுார், சாலைகளில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு, சீரமைக்கப்பட்டது. நாராயணபுரம் தரைப்பாலம், ஊத்துக்கோட்டை தரைப்பாலத்தில் போக்குவரத்து நிறுத்தப்பட்டு உள்ளது.புதுச்சத்திரம் - திருநின்றவூர், திருத்தணி என்.என்.கண்டிகை தரைப்பாலங்கள், முத்துகொண்டாபுரம் பாலம், பிஞ்சிவாக்கம், சத்தரை உட்பட, 62 பாலங்கள் சேதமடைந்து உள்ளன.

பயிர்களும் பாதிப்பு மாவட்டத்தில், 1.20 லட்சம் ஹெக்டேரில் சம்பா நெல் பயரிடப்பட்டு இருந்தது. தொடர் மழை காரணமாக, இதுவரை, 49,400 ஏக்கரில், மழைநீர் தேங்கியதாக கண்டறியப்பட்டு உள்ளது. இதில், பயிரை அறுவடை செய்ய முடியாமல், 20 ஆயிரம் ஏக்கர் நாசமாகி இருக்கலாம் என, விவசாயிகள் தெரிவித்தனர்.நேற்று முன்தினம் இரவு முதல், நேற்று மாலை வரை, மாவட்டத்தில் மழை இல்லை. நீண்ட நாள் கழித்து வெயில் அடித்ததால், குடியிருப்பு பகுதிகளில் தேங்கிய மழைநீர், வடிந்து கொண்டிருக்கிறது.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் வீரராகவ ராவ் கூறியதாவது:

உணவு மாவட்டத்தில், பெய்த கனமழை காரணமாக, 62 பாலங்கள் சேதமடைந்து உள்ளன. பயிர்ச்சேதம் குறித்து கணக்கெடுப்பு தொடர்ந்து நடந்து வருகிறது. நேற்று, 134 முகாம்களில், 29,664 பேர் தங்கி உள்ளனர். மொத்தம், 98,516 பேருக்கு உணவு வழங்கப்பட்டு உள்ளது.மழையால் பாதிக்கப்பட்ட கிராமங்கள், பேரூராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில், பால் பவுடர் வழங்க, 100 டன் பால் பவுடர் தமிழக அரசு, வழங்கி உள்ளது. இவற்றை வினியோகிக்கும் பணி தொடர்ந்து நடக்கிறது. நிவாரணம் வழங்கும் பணியை கண்காணிக்க, 45 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

திருவள்ளூர் மாவட்ட சேதம் விவரம்

முகாம்கள் 134 முகாம்களில் தங்கி உள்ளவர்கள் 29,664 பேர்

வெளியில் தங்கி உள்ளவர்கள்68,852 பேர்

உயிரிழந்தோர்42 பேர்

இறந்த கால்நடைகள்362

வீடுகள்

சேதமடைந்தவை39,377

வழங்கிய நிவாரணம் 5.71 கோடி ரூபாய்.

மருத்துவ முகாம்கள் 110

குடும்ப அட்டை தயாரானவை 1,342

பாடப்புத்தங்கள் பெற்ற மாணவர்கள் 2,596

சீருடை பெற்றவர்கள் 1,995

படகுகளில் மீட்கப்பட்டோர் 11,900 பேர்

சேதமடைந்த தரைப்பாலங்கள் நிரந்தர சீரமைப்புக்கு தேவைப்படும் நிதி (ரூ.கோடியில்)

புதுச்சத்திரம் கூவம் 23

ஊத்துக்கோட்டை ஆரணி தரைப்பாலம் 60

கொண்டஞ்சேரி பாலம் 12

மேலானூர் - மெய்யூர் பாலம் 17

பிஞ்சிவாக்கம்

தரைப்பாலம் 10

சத்தரை - பேரம்பாக்கம் பாலம் 1

என்.என்.கண்டிகை தரைப்பாலம் 22

முத்துகொண்டாபுரம் பாலம் 12

786 கி.மீட்டர் சாலை சேதம்: சீரமைக்க ரூ.351 கோடி தேவை

பலத்த மழையால், 786 கி.மீட்டர் துாரத்திற்கு சாலைகள் சேதமடைந்து உள்ளன. இதனை தற்காலிகமாக சீரமைக்க, 194 கோடி ரூபாயும், நிரந்தரமாக சீரமைக்க, 351 கோடி ரூபாயும் தேவைப்படுகிறது.

சாலை சேதம் மற்றும் சீரமைக்க தேவைப்படும் நிதி விவரம்

சாலை வகை சேதமான துாரம்(கி.மீட்டர்)தற்காலிக சீரமைப்பு - நிதி நிரந்தர சீரமைப்புக்கு தேவையான நிதி(ரூ.கோடியில்)

| | | | |
|---|---|---|---|
| மாநில நெடுஞ்சாலை | 276 | 82 | 104 |
| மாவட்ட முக்கிய சாலை | 120 | 32 | 87 |
| மாவட்ட இதர சாலை | 390 | 80 | 160 |
| மொத்தம் | 786 | 194 | 351 |

**தாமிரபரணி ஆற்றில் வெள்ள அபாயம் நீங்கியது**



நெல்லை : நெல்லை மாவட்டம் தாமிரபரணி ஆற்று பகுதியில் விடப்பட்டிருந்த வெள்ளம் அபாயம் நீங்கி உள்ளது. பாபநாசம் அணையில் இருந்து திறந்து விடப்படும் உபரிநீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளதால், தாமிரபரணி ஆற்றில் கரைபுரண்டு ஓடிய வெள்ளம் தற்போது வடிய துவங்கி உள்ளது.நெல்லை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த கனமழையால் பாபநாசம் அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து அதிகரித்தது. இதனால் அணையிலிருந்து தாமிரபரணி ஆற்றில் விநாடிக்கு 15,000 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வந்தது. விநாடிக்கு 30,000 கனஅடி வீதம் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இந்நிலையில் நேற்று(டிசம்பர் 8) பிற்பகல் முதல் நெல்லை மாவட்டம், பாபநாசம் அணை பகுதி ஆகியவற்றில் மழை ஓய்ந்தது. இதனால் அணையில் இருந்து திறந்து விடப்படும் நீரின் அளவு 15,000 கனஅடியில் இருந்து 7000 கனஅடியாக குறைக்கப்பட்டது. இதனையடுத்து தாமிரபரணி ஆற்றங்கரையோர மக்களுக்கு விடப்பட்டிருந்த வெள்ள அபாயம் படிப்படியாக நீங்கியது.

கடந்த சில நாட்களாக நெல்லை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால், நெல்லை மாவட்டத்தில் உள்ள 11 அணைகள் தனது முழு கொள்ளளவை எட்டி உள்ளன. 118 அடி கொள்ளளவு கொண்ட மணிமுத்தாறு

அணை நேற்று (டிசம்பர் 8) 103 அடியாக இருந்தது. இருப்பினும் அஜணக்கு வரும் நீரின் அளவு அதிகரித்ததன் காரணமாக இன்று (டிசம்பர் 9) காலை 115.52 அடியாக உயர்ந்துள்ளது.

தொடர் மழை காரணமாக நெல்லை மாவட்ட பள்ளி, கல்லூரிகளுக்கு நேற்று விடுமுறை விடப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று பிற்பகல் முதல் மழை ஓய்ந்ததால் இன்று பள்ளி, கல்லூரிகள் வழக்கம் போல் இயங்குகின்றன. நெல்லையில் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளிலும், வெள்ளநீர் வடிந்து வருவதால் இயல்பு நிலை திரும்பி உள்ளது.

**ஏரிகளில் கடந்த ஆண்டை விட 3 மடங்கு நீர் இருப்பு!**



சென்னை : சென்னை மக்களின் குடிநீருக்கு ஆதாரமான பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம் உள்ளிட்ட ஏரிகளில் கடந்த ஆண்டு இருப்பை விட 3 மடங்கு அதிக நீர் தற்போது இருப்புள்ளது. சென்னை, காஞ்சி, திருவள்ளூர் மாவட்டங்களில் பெய்த கனமழையால், சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரங்களான செம்பரபாக்கம், பூண்டி, புழல், வீராணம், சோழவரம்

உள்ளிட்ட பல்வேறு ஏரிகள் வேகமாக நிரம்பின. இதனையடுத்து உபரி நீர் அதிகளவில் திறந்தவிடப்பட்டதால் அடையாறு, கூவம் உள்ளிட்ட ஆறுகளில் பெருக்கெடுத்து ஓடிய வெள்ளம், குடியிருப்புகளில் புகுந்து பெரும் சேதத்தை விளைவித்தது. இந்நிலையில் நீர்திறப்பு தற்போது குறைக்கப்பட்டுள்ளதால், அடுத்த ஓரிரு ஆண்டுகளுக்கு சென்னை மக்களுக்கு தேவையான குடிநீர் தற்போது இருப்பு உள்ளது. பூண்டி ஏரியில் 2,507 மில்லியன் கனஅடி நீரும், செம்பரம்பாக்கம் ஏரியில் 2,986 மில்லியன் கனஅடி நீரும், புழல் ஏரியில், 2,823 மில்லியன் கனஅடி நீரும் தற்போது இருப்பு உள்ளது. மொத்தத்தில் பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம் உள்ளிட்ட ஏரிகளின் முழுக் கொள்ளளவில்(11,057 மில்லியன் கனஅடி) தற்போது 9,111 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3 மடங்கு அதிகம். இதனால் அடுத்த ஓரிரு ஆண்டுகளுக்கு சென்னை மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு இருக்காது.

### ஆழியாறு அணைக்கு நேற்றைய நீர்வரத்து 3,225 கனஅடி:மூன்றாவது நாளாக உபரிநீர் வெளியேற்றம்

பொள்ளாச்சி:பொள்ளாச்சி ஆழியாறு அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டியதையடுத்து, மூன்றாவது நாளாக மதகுகள் வழியாக உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே உள்ள ஆழியாறு அணை, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் முக்கிய அணையாக உள்ளது. இந்த அணையில், சேகரிக்கப்படும் தண்ணீர், பழைய ஆயக்கட்டு, புதிய ஆயக்கட்டு, கேரள நீர் பாசனத்திற்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது. இது தவிர, குடிநீர் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழைய ஆயக்கட்டு பாசனத்தில் உள்ள, ஆறு ஆயிரத்து 400 ஏக்கர் நிலங்களும்; புதிய ஆயக்கட்டு பாசனத்தில், 42 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு ஆழியாறு ஆறு மூலமாகவும்; புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு வேட்டைக்காரன்புதுார் கால்வாய் வழியாகவும் தண்ணீர் வழங்கப்படுகிறது.

கடந்தாண்டு பருவமழை கை கொடுத்ததால், ஆழியாறு அணை நீர்மட்டம் கொள்ளளவை எட்டியது. தொடர்ந்து, இரண்டு மாதங்கள் நிரம்பிய நிலையிலேயே ஆழியாறு அணை காட்சியளித்தது. மேலும், கடந்த ஒரு ஆண்டாக 100 அடிக்கு குறையாமல் அணை நீர்மட்டம் நீடித்ததால், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர். கடந்தாண்டை போன்று, இந்தாண்டும் பருவமழை கை கொடுத்து, அணை நிரம்பும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பருவமழை போதிய அளவு பெய்யவில்லை. இதனால், அணை முழு கொள்ளளவை எட்டுமா என கேள்விக்குறி எழுந்தது. கடந்த சில நாட்களாக ஆழியாறு மற்றும் நீர்பிடிப்பு பகுதிகளில், தொடர் மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டமும் மெல்ல.. மெல்ல.. உயர்ந்து வருகிறது.

கடந்த 6ம் தேதி ஆழியாறு அணை முழு கொள்ளளவை எட்டியதால், உபரிநீர் வெளியேற்றப்பட்டது. தொடர்ந்து, வினாடிக்கு, 4000 கன அடிநீர் வெளியேற்றப்பட்டது. தொடர்ந்து, மூன்றாவது நாளாக நேற்றும் ஆழியாறு அணையிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டது. தொடர் கண்காணிப்பு

'ஆழியாறு அணை நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டியதால், உபரிநீர் வெளியேற்றப்படுகிறது. தொடர்ந்து, கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன; ஆழியாறு ஆற்றுப்பகுதியில் யாரும் குளிக்க வேண்டாம், கால்நடைகளை கட்டி விட வேண்டாம், ஆற்றோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என அறிவுரைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன,' என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கிராமிய அடிப்படையில் வேளாண் பயிற்சி**

வாலாஜாபாத் : வேளாண் உழவர் பயிற்சி நிலையம் சார்பில், விவசாயிகளுக்கு, 'கிராமிய அடிப்படையில் வேளாண் பயிற்சி' முகாம் நேற்று படுநெல்லி கிராமத்தில் நடந்தது. படுநெல்லி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், நேற்று நடந்த முகாமிற்கு, உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் எஸ்.சுரேஷ்குமார் தலைமை தாங்கினார். உழவர் பயிற்சி நிலைய துணை

இயக்குனர் எம்.பத்மாவதி முன்னிலை வகித்து, 'திருந்திய நெல் சாகுபடியில், நெல் நாற்றினை கயிறு பிடித்து நடவு செய்தல், அதிக விளைச்சலுக்கு உயிர் உரங்கள் இடுவது; விளை பொருட்களை எவ்வாறு சந்தைப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப பயிற்சிகளை கிராமிய வேளாண் முறையில்' வழங்கினார். இந்த பயிற்சி முகாமில், படுநெல்லி, கோவிந்தவாடிஅகரம், கம்மவார்பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமத்தை சேர்ந்த 30 விவசாயிகள் மற்றும் உழவர் மன்ற அமைப்பாளர் கள் பலர் கலந்து கொண்டனர்.

**5 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் நாசம்: தமிழக விவசாயிகள் சங்கம் தகவல்**

வேலூர்: "கன மழையால், வேலூர் மாவட்டத்தில், 15 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் நாசமாகியுள்ளது," என, தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட பொருளாளர் வெங்கடேசன் கூறினார். தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட நிர்வாகிகள் கூட்டம், வேலூரில் நேற்று நடந்தது. அப்போது, மாவட்ட பொருளாளர் வெங்கடேசன் நிருபர்களிடம் கூறியதாவது: வேலூர் மாவட்டத்தில், தொடர் மழையால், 15 ஆயிரம் ஏக்கரில் பயிரிட்டிருந்த, நெல், வாழை, சாமை, கரும்பு போன்ற பயிர்கள் நாசமாகி விட்டன. குடியாத்தம், வாணியம்பாடி, திருப்பத்தூர், நாட்றம்பள்ளியில், 5,000 ஏக்கர் பருத்தி செடிகளும், அரக்கோணம், ராணிப்பேட்டை, சோளிங்கர், பேர்ணாம்பட்டு பகுதிகளில், 2,000 ஏக்கர் கொய்யா, வாழை, பூசணி போன்றவைகளும் நாசமாகி விட்டன. இதனால், மாவட்டத்தில், 30 ஆயிரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். 10 கோடி ரூபாய் மதிப்புக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து, வேளாண்மைத் துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும், அவர்கள் ஆய்வு செய்யவில்லை. எனவே, தமிழக அரசு உத்தரவிட்டு, பாதிப்புகள் குறித்து நேரில் ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழகத்தில் பெய்யும் தொடர் மழையால் உளுந்தம் பருப்பு விலை கிடு கிடு

சேலம்: தமிழகத்தில் பெய்து வரும் தொடர் மழையால், முக்கிய நகரங்களுக்கு இடையிலான, உளுந்தம் பருப்பு பரிமாற்றம் தடை பட்டுள்ளதால், வரத்தில் சரிவு ஏற்பட்டு, விலை குவிண்டாலுக்கு, 600 ரூபாய் வரை, உயர்ந்துள்ளது.

நடப்பாண்டு ஜனவரி மாதத்தில் துவரம் பருப்பு, பாசி பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியன கிலோ, 110 ரூபாய் முதல், 120 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. கடந்த, 12 மாதத்தில் படிப்படியாக விலை உயர்வை சந்தித்து, துவரம் பருப்பு வரலாறு காணத விலை உயர்வாக கிலோ, 200 ரூபாய்க்கும், உளுந்தம் பருப்பு, 175, பாசி பருப்பு 135 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில், நேற்று யாரும் எதிர்பார்க்காத வகையில், உளுந்தம் பருப்பு வரத்தில் சரிவு ஏற்பட்டதை அடுத்து, அதன் விலை குவிண்டாலுக்கு, 600 ரூபாய் வரை, உயர்ந்தது. சேலம் பருப்பு வியாபாரி குமரேசன் கூறியதாவது: தமிழகத்தின் பெரிய மார்க்கெட்டுக்களான சென்னை, சேலம், விருதுநகர் ஆகியவையே உளுந்தம் பருப்பு விலை நிர்ணயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சென்னையில் பெய்த மழையால், உளுந்தம் பருப்பு பரிமாற்றம் தடைபட்டுள்ளது. பிற நகரங்களிலும் மழை தொடர்வதால், பருப்பு மில்களில் இருந்து மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் உளுந்தம் பருப்பின் வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளதால், விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## வேளாண் துறை சார்பில் விதை உற்பத்தி பயிற்சி

ஆத்தூர்: கெங்கவல்லி வட்டார வேளாண் துறை சார்பில், கொண்டையம்பள்ளி கிராமத்தில், விதை கிராம திட்டத்தில், உழவர்களுக்கு தரமான விதை உற்பத்தி செய்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. அதில், வேளாண் உதவி இயக்குனர் சென்னகேசவலு பேசியதாவது: தரமான விதை நல்ல மகசூலுக்கு ஆதாரம். விவசாயிகளுக்கு, தரமான விதை கிடைக்கவும், விதை உற்பத்தி மூலம் கூடுதல்

வருமானம் பெறவும், பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆதார விதையை பயன்படுத்தி, சான்று விதை உற்பத்தி செய்தால், அரசின் கூடுதல் மானியம் பெறலாம். இவ்வாறு அவர் பேசினார்.

**நெல் சாகுபடி விவசாயிகளுக்கு மேலாண்மை பயிற்சி**

தர்மபுரி: தர்மபுரியை அடுத்த பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில், திருந்திய நெல் சாகுபடி மற்றும் நெல்லை தாக்க கூடிய பூச்சிகளை இயற்கை முறையில் அழிப்பது குறித்த மேலாண்மை பயிற்சி வரும், 11ம் தேதி நடக்கிறது. இதுகுறித்து, பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கை: நீர் நிலைகளில் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் நெல் நடவு செய்ய தேவையான நடவடிக்கைகளை தற்போது எடுத்து வருகின்றனர். நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறவும், நெல்லை தாக்கும் பூச்சிகளை அழிப்பது குறித்தும், பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில், வரும், 11ம் தேதி, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. அதில், நிலத்தை துல்லியமாக சமன் செய்தல், குறைந்தளவு விதை நெல்லை பயன்படுத்துதல், அதிக மகசூல் பெற, 14 வயதுள்ள நாற்றுகளை நடவு செய்தல் மற்றும் நெல்லை தாக்க கூடிய பூச்சிகளை ரசாயன மருத்துகளால் அழிப்பதால் ஏற்படும் பாதிப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியில், இயற்கை முறையில் நெல்லை தாக்கும் பூச்சிகளை அழிப்பது குறித்த பயிற்சி வழங்கப்படவுள்ளது. எனவே, இந்த பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பு விவசாயிகள், 04342-245860 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு, தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளின் மிக முக்கிய சொத்து மண் மட்டுமே:உலக மண் தின நிகழ்ச்சியில் தெளிவு**

ஊட்டி:'விவசாயிகளின் மிக முக்கிய சொத்து, மண் மட்டும் தான்' என, தெரிவிக்கப்பட்டது. இந்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு நிறுவனத்தின் ஊட்டி மண்டல மையம் சார்பில், கெந்தொரை கிராமத்தில் உள்ள சமுதாய கூடத்தில், உலக மண் தினம் கொண்டாடப்பட்டது.

மையத்தின் முதன்மை விஞ்ஞானி டாக்டர் மணிவண்ணன் வரவேற்று பேசுகையில்,"உலக மண் தினம், கடந்த, 2002ல் இருந்து உலகம் முழுக்க கொண்டாடப்படுகிறது. இந்தாண்டை, சர்வதேச மண் ஆண்டாக ஐ.நா., சபை அறிவித்துள்ளது. நீலகிரியில் இரு கிராமங்களை இந்த மையம் தத்தெடுத்து, மண் வள பாதுகாப்பு ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளது," என்றார்.

நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, மைய தலைவர் டாக்டர் ஓம் பால்சிங் கோலா பேசுகையில்,"விவசாயிகளின் மிக முக்கிய சொத்து, மண் மட்டுமே. இந்த இயற்கை மண் வளத்தை பாதுகாப்பதற்கான பல தொழில் நுட்பங்களை இந்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு மையம் உருவாக்கியுள்ளது; விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்; மைய விஞ்ஞானிகள் வழிகாட்ட தயாராக உள்ளனர்," என்றார். சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற, ஊரக வளர்ச்சி அறக்கட்டளை தலைவர் பேசுகை யில், "கெந்தொரை கிராமத்தை, இயற்கை விவசாய கிராமமாக மாற்றுவதற்கான சாத்திய கூறுகள் உள்ளன. அதற்கான முயற்சிகளை, மண், நீர் வள பாதுகாப்பு நிறுவனத்தினர் மேற்கொள்ள வேண்டும்," என்றார்.நிகழ்ச்சியில், முதன்மை விஞ்ஞானி கண்ணன், முதுநிலை விஞ்ஞானி சுந்தராம்பாள், விஞ்ஞானி ரகுபதி, தொழில்நுட்ப அதிகாரி மோகன்ராஜ் ஆகியோர் மண் பாதுகாப்பு குறித்து பேசினர்.

ஒருங்கிணைப்பாளர் டாக்டர் கஸ்தூாரி திலகம், மண் பரிசோதனைக்கு, மண் மாதிரிகளை சேகரிப்பது குறித்து செயல் விளக்கம் அளித்தார்.உருளை மற்றும் கோதுமை ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் பங்கேற்றனர். இயற்கை உரங்கள், அதனை பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

**நார்த்தங்காய் விளைச்சல் அமோகம்**

கீழக்கரை: கீழக்கரை அருகே நத்தம், குளபதம், காஞ்சிரங்குடி, முத்துப்பேட்டை, பெரியபட்டினம் உள்ளிட்ட பகுதிகளில் ஊடுபயிராக நார்த்தங்காய் செடிகள் அதிகளவில் சாகுபடி செய்யப் பட்டுள்ளது. தொடர்ந்து மழை பெய்துவருவதால் நார்த்தங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது. ஊறுகாய்க்கு உகந்தது என்பதால் விற்பனை அதிகரித்துள்ளது. நார்த்தங்காய் வியாபாரி முனியசாமி கூறுகையில், ""கடந்த ஆண்டு ரூ.25க்கு விற்ற நார்த்தங்காய் இந்தாண்டு அதிக விளைச்சல் கண்டுள்ளதால் கிலோ ரூ. 20க்கு விற்பனை செய்கிறோம். இங்கிருந்து ராமநாதபுரம், பரமக்குடி, ராமேஸ்வரம் உள்ளிட்ட இடங்களுக்கு வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர்," என்றார்.

**தொடர்மழையால் காய்கறி விலை உயர்வு கிலோ 120ஐ எட்டியது கத்தரிக்காய்**

விருதுநகர்: தொடர்மழையால் வரத்து குறைந்ததால் விருதுநகர் மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை கடந்தவாரத்தைவிட உயர்ந்தது. இதில் கிலோ கத்தரிக்காய் 120 ஐ எட்டியது. விருதுநகர் மார்க்கெட்டிற்கு விருதுநகர் சுற்றுப் பகுதிகள் மற்றும் மதுரை, திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம், கொடைக்கானல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து தினமும்

லாரிகளில் காய்கறிகள் விற்பனைக்கு வருகின்றன. தொடர்மழை காரணமாக வரத்து குறைந்ததால் அவற்றின் விலை கடந்தவாரத்தை விட அதிகரித்துள்ளது. வியாபாரி ஜெகதீசன் கூறுகையில்,""தொடர்மழை காரணமாக மார்க்கெட்டிற்கு காய்கறி வரத்து குறைந்ததால் அதன் விலை உயர்ந்தது. மழை நீடித்தால் மேலும் உயரும். கார்த்திகை மாதம் சபரிமலை சீசனால் தேவை அதிகரிப்பதால் விலை உயர்ந்துள்ளது,"என்றார்.

| காய்கறி | டிச.,1ல் விலை (கிலோ ரூ.) | நேற்றைய விலை |
|---|---|---|
| காரட் | 40 | 50 |

| | | |
|---|---|---|
| காலிபிளவர் | 60 | 70 |
| முட்டைக்கோஸ் | 20 | 25 |
| சேனை | 35 | 40 |
| பாகற்காய் | 40 | 50 |
| பீட்ரூட் | 30 | 40 |
| சவ்சவ் | 25 | 30 |
| சோயாபீன்ஸ் | 60 | 80 |
| பட்டர் பீன்ஸ் | 120 | 140 |
| மிளகாய் | 40 | 50 |
| கத்தரி | 120 | 120 |
| தக்காளி | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 25 | 30 |
| வெண்டைக்காய் | 20 | 30 |
| அவரைக்காய் | 60 | 60 |
| தடியங்காய் | 15 | 15 |
| முருங்கை | 100 | 140 |

## 9200 டன் தானியங்களை இருப்பு வைக்கும் வசதி

தேனி:தேனி மாவட்டத்தில் 9 ஆயிரத்து 200 டன் தானியங்களை இருப்பு வைக்கும் அளவுக்கு புதிதாக 63 குடோன்கள் கட்டப்பட்டுள்ளன. விவசாயிகள் இவற்றை பயன்படுத்த வேண்டும் என கூட்டுறவுத்துறை வேண்டுகோள்

விடுத்துள்ளது. தேனி மாவட்டத்தில் 57 தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களிலும், கூட்டுறவு விற்பனை மையங்களிலும் சேர்த்து 63 தானிய சேமிப்பு குடோன்கள் கட்டப்பட்டு உள்ளன. இதில் ஒரு குடோனில் ஆயிரம் டன்னும், 5 குடோன்களில் தலா 500 டன்னும், 57 குடோன்களில் தலா 100 டன்னும் விவசாய விளை பொருட்களை இருப்பு வைக்க முடியும். அவற்றின் மதிப்பில் 70 சதவீதம் வரை விவசாயிகளுக்கு கடன் வழங்கப்படும்.

இதன் மூலம் விவசாயிகள் விலை குறைந்த நேரத்தில் பொருட்களை இருப்பு வைத்துக் கொண்டு, விலை உயரும் நேரம் விற்க முடியும். கட்டி முடிக்கப்பட்டு, திறக்கப்பட்டுள்ள இந்த குடோன்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் என கூட்டுறவுத்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**டிச. 25 முதல் 27 வரை ராமநாதபுரத்தில் தோட்டக்கலைக் கண்காட்சி: ஆட்சியர்**

ராமநாதபுரம் அருகேயுள்ள ஐந்திணை மரபணுப் பூங்காவில் இம்மாதம் 25 முதல் 27 ஆம் தேதி வரை தோட்டக்கலைக் கண்காட்சி நடைபெற இருப்பதாக மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியது: ராமநாதபுரம மாவட்டம் கிழக்கு கடற்கரை சாலையில் அச்சடிப்பிரம்பு கிராமத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் ஐந்திணை மரபணுப் பூங்கா கடந்த ஜூன் மாதம் திறந்து வைக்கப்பட்டது. 10 ஏக்கர் பரப்பளவிலான இப்பூங்காவிற்கு பொதுமக்கள், சுற்றுலாப்பயணிகள், மாணவ, மாணவிகளை அதிகம் ஈர்க்கும் வகையில் வரும் 25, 26 மற்றும் 27

ஆகிய 3 நாள்கள் தோட்டக்கலைக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது. இக்கண்காட்சியில் பல வகையான ரோஜா மலர்கள், கார்னேஷன், ஜெர்பரா, ஆந்தூரியம், லில்லி, ஆர்கிட்ஸ், கிளாடியோலஸ், ஆல்ஸ்ட்ரோமீரியா மற்றும் டெய்சி போன்ற மலர்களாலான உருவகங்களும், மலர் அலங்காரங்களும் மிகச்சிறப்பாக இடம்பெறவுள்ளது. பல்வேறு காய்கறிகளால் வடிவமைக்கப்பட்ட காய்கறி சிற்பங்களும், இயற்கை காட்சிகளும் உருவாக்கப்பட்டு சிறப்பான முறையில் அமைத்திட தோட்டக்கலைத்துறையின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கண்காட்சியை ராமநாதபுரம் மாவட்ட பொதுமக்கள் அனைவரும் கண்டுகளிக்க வேண்டும் என்றார்.

**தோட்டக் கலை பயிற்சி முகாம்**

நீலகிரி மாவட்ட தோட்டக்கலை துறை, குன்னூர் வட்ட வேளாண்மை, தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கான மாவட்ட அளவிலான பயிற்சி முகாம் குன்னூர் அருகே உள்ள தாம்பட்டி கிராமத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தப் பயிற்சி முகாமிற்கு குன்னூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் உமாராணி தலைமை வகித்தார். பேராசிரியர் சங்கரி முன்னிலை வகித்தார். இதில், தோட்டக்கலைத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், புதிய தொழில்நுட்ப முறையில் அயல்நாட்டு சாகுபடி முறைகள் மற்றும் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து, வணிகம் மற்றும் விற்பனை துறைத் மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் அறுவடை செய்த பின் மேற்கொள்ளப்பட வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டன. இந்த முகாமில் உதவி வேளாண்மை அலுவலர் சரவணன், தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் சர்மிளா, ஷீலா, பரமசிவம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**சிறு தேயிலை விவசாயிகளுக்கான பயிற்சி**

கோத்தகிரியில் தேயிலை வாரியம் சார்பில், சிறு தேயிலை விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. புடியங்கி கிராமத்தில் நடைபெற்ற இம்முகாமிற்கு, தேயிலை வாரிய உதவி இயக்குநர் பகலவன் தலைமை வகித்தார். ஹிரியோடையா தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் சிவாஜி, ஊர்த் தலைவர் மாதன், நான்கு ஊர்த் தலைவர் கிருஷ்ணன், காரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விவசாயிகள் சங்க நிர்வாகிகள் சாந்தி ராமு, பெள்ளி ஆகியோர் சிறு தேயிலை விவசாயிகளின் பிரச்னைகள் குறித்துப் பேசினர். தொடர்ந்து, தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநர் பால்ராசு பேசியதாவது: தரமான பசுந்தேயிலையைக் கொடுத்து நியாயமான விலையை தொழிற்சாலைகளிலிருந்து பெறலாம். சில்வர் டிப் டீ, ஹேண்ட் ரோல் டீ தயாரிப்பதற்கு வாரியம் சார்பில் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்படும். குழுக்கள் அமைத்து செயல்பட்டால் தேயிலை வாரியம் சார்பில் வாகனம், கவாத்து ஆகியவற்றிற்கு மானியம் வழங்கப்படும் என்றார். தொடர்ந்து, விவசாயிகளுக்கு தேயிலை வாரியம் சார்பில் மானியம் பெறுவதற்கான ஸ்மார்ட் கார்டு வழங்கினார். இதில், குன்னூர் வளர்ச்சி அலுவலர் அஞ்சலி, உபாசி பொறியாளர் சதீஷ், தோட்டக் கலைத் துறை அலுவலர் சந்திரன் உள்பட பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**காய்கறிகள் சாகுபடி பயிற்சி**

கூடலூர், பந்தலூரில் காய்கறிகள் சாகுபடிக்கான நவீன தொழில்நுட்ப ஒரு நாள் பயிற்சி முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. முகாமிற்கு, தோட்டக் கலை துணை இயக்குநர் ராமசுந்தரம் தலைமை வகித்தார். தோட்டக் கலைத் துறை மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் திட்டங்கள் குறித்தும், காய்கறிகள் சாகுபடிக்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

வட்டார தொழில் நுட்ப மேலாளர் க.யமுனப்பிரியா, தோட்டக் கலை ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் சங்கரி, வேளாண் அலுவலர் ரமேஷ் ஆகியோர் பயிற்சியளித்தனர். முகாமில், கூடலூர், பந்தலூர் பகுதி விவசாயிகள் திரளானோர் கலந்துகொண்டனர்.

**செம்மை நெல் சாகுபடி விவசாயிகளுக்கான பயிற்சி முகாம்**

திருவண்ணாமலையை அடுத்த அடி அண்ணாமலை கிராமத்தில், செம்மை நெல் சாகுபடி குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. வேலூர் மாவட்டம், கலவை ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் குழு இந்த பயிற்சி முகாமை நடத்தியது. அடி அண்ணாமலை ஊராட்சித் தலைவர் வி.சீத்தாராமன் தலைமை வகித்தார். கல்லூரி மாணவர்கள் சி.தர்மதுரை, பி.திவாகர், பி.தோம்ணிக் மனோஜ், ஏ.கார்த்திக், எஸ்.மனோஜ்குமார், பி.நரேந்திரன், ஆர்.முத்துகுமார் ஆகியோர் விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி பயிற்சி அளித்தனர்.

இதுதவிர, நீடித்த நவீன கரும்பு சாகுபடி, காளான் வளர்ப்பு முறை, மண்புழு உரம் தயாரிப்பு, பசுந்தாள் உரத்தின் பயன்கள், உயிர் உரங்களின் பயன்கள் குறித்து வீடியோ படக்காட்சிகள் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. நெல் நாற்று நடுவதற்கு முன்பாக உயிர் உரமான அசோஸ்பைரில்லத்தில் நாற்றின் வேர்ப்பகுதியை எவ்வாறு நனைத்து நடுவது என்பது குறித்தும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சி முகாமில், அடி அண்ணாமலை பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

**எழுமாத்தூர் விற்பனைக் கூடத்தில் ரூ. 14 லட்சத்துக்கு வர்த்தகம்**

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய், கொப்பரை வர்த்தகம் திங்கள்கிழமை நடைபெற்றது. எழுமாத்தூர் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 16 டன் எடையுள்ள 42,924 தேங்காய்களை

விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். அதில், அதிகபட்சமாக டன் ரூ. 17,399-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 14,899-க்கும், சராசரி விலையாக 15,623-க்கும் என மொத்தம் ரூ. 2,58,000-க்கு விற்பனையானது. அதேபோல, 435 மூட்டைகளில் 18,899 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். அதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 70-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 66.60-க்கும், சராசரி விலையாக 67-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 64.10-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 46-க்கும், சராசரி விலையாக ரூ. 58.50-க்கும் என மொத்தம் ரூ. 11,88,000-க்கு விற்பனையானது. மொத்தம் ரூ. 14,46,000 ஆயிரத்துக்கு கொள்முதல் நடைபெற்றது.

**டிச.11-இல் திருந்திய நெல் சாகுபடி குறித்த பயிற்சி**

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் வருகிற டிச.11-ஆம் தேதி திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இது குறித்து பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தருமபுரி மாவட்டத்தில் கடந்த காலங்களில் பருவமழை போதிய அளவு பொழியாததால் நெல் சாகுபடி பரப்பளவு குறைந்தது. இந்த நிலையில், தற்போது மாவட்டத்தில் அதிக அளவு மழை பெய்துள்ளதால் நெல் சாகுபடியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இதனால், சாகுபடி பரப்பளவு நிகழாண்டு அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

இதில், திருந்திய நெல் சாகுபடியில் பூச்சி தாக்குதலின்றி, ரசாயனம் கலந்த மருந்துகளை பயன்படுத்தாமல், மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பம் குறித்து பயிற்சி வருகிற டிச.11-ஆம் தேதி அளிக்கப்பட உள்ளது.

எனவே, மாவட்ட விவசாயிகள் இந்த பயிற்சி முகாமில் பங்கேற்ற பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. பயிற்சியில் கலந்துகொள்ள 04342-245860.


**பயிர் காப்பீடு செய்ய வேண்டுகோள்**

கூட்டுறவு சங்கங்களில் கடன் பெறாத விவசாயிகள், பயிர் காப்பீடு செய்ய டிசம்பர் 15-ஆம் தேதி கடைசி நாள் என கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவர் எஸ்.ஆசைமணி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை கூறியது:

கூட்டுறவு சங்கங்களில் கடன் பெறாத விவசாயிகள், அந்தந்தப் பகுதி கிராம நிர்வாக அலுவலர்களிடம் உரிய சான்று பெற்று, தங்கள் பகுதியிலுள்ள கூட்டுறவு வங்கிகளில் பயிர் காப்பீடு செய்ய வேண்டும். வருகிற 15- ஆம் தேதி இதற்கான கடைசி நாள் எனக் கூறினார்.

**காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக காவிரி டெல்டா மற்றும் தென் மாவட்டங்களில் பரவலாக மழை**



தஞ்சாவூர்,

காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக காவிரி டெல்டா மற்றும் தென் மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துவருகிறது. டெல்டா மாவட்டங்கள் தென்மேற்கு வங்க கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. நாகை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நேற்று கனமழை பெய்தது. இதனால் பல பகுதிகளில் மழைநீர் சூழ்ந்தது. சில வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. வேதாரண்யத்தில் உப்பளங்களில் மழைநீர் தேங்கி உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது. கடல் சீற்றத்துடன் காணப்பட்டதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை. திருவாரூர் மாவட்டத்தில் தொடர்ந்து 10 நாட்களாக மழை பெய்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் பெய்து வரும் மழையால் தாழ்வான பகுதிகளில் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. கல்லணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள குளம், ஏரிகள் நிரம்பி வருகின்றன. கோணாவாரி கரையில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வயல்களுக்குள் புகுந்ததில் 500 ஏக்கர் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. முல்லைப்பெரியாற்றில் பெண் பலி தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று லேசான மழை பெய்தது. முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டியுள்ளதால், அணையில் இருந்து வினாடிக்கு 1,913 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. முல்லைப்பெரியாற்றில் குளிக்க சென்ற கிருஷ்ணம்மாள் (வயது 50) என்பவர் வெள்ளத்தில் சிக்கி பலியானார். வைகை அணையில் இருந்து வினாடிக்கு 4,060 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் கடந்த 4 நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. திண்டுக்கல், கொடைக் கானல், ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், பழனி, வத்தலக்குண்டு என அனைத்து பகுதியிலும் நேற்று மழை பெய்தது. ராமநாதபுரம், ராமேசுவரம் பகுதிகளில் நேற்று பலத்த மழை பெய்தது. ராமேசுவரத்தில் 10-க்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் மழை வெள்ளம் புகுந்தது. ஒரு பயணிகள் நிழற்குடை இடிந்து விழுந்தது. பாம்பன் பகுதியில் மழையுடன் கடல் கொந்தளிப்பும் கடுமையாக இருந்தது. இதனால் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. சிவகங்கை, கன்னியாகுமரி சிவகங்கை மாவட்டத்தில் 2 நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது.

இதனால் மாவட்டத்தில் உள்ள கண்மாய்கள், குளங்கள் நிரம்பி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்தது. பேச்சிப்பாறை அணையில் இருந்து வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையில் இருந்து 600 கனஅடி தண்ணீரும், சிற்றார்-1 அணையில் இருந்து 500 கனஅடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது. ஆற்றங்கரைகளில் வசிக்கும் மக்களுக்கு சைரன் மூலம் வெள்ள அபாய எச்சரிக்கை கொடுக்கப்பட்டது.

மண் சரிவு நாமக்கல் மாவட்டத்தில் பெய்த மழை காரணமாக கொல்லிமலை பாதையில் சில இடங்களில் மண் சரிவு ஏற்பட்டது. இதனால் கொல்லிமலைக்கு சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

நெல்லை நெல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. அணைப் பகுதிகளிலும், நீர்ப்பிடிப்பு பகுதியிலும் கனமழை பெய்து வருகிறது. தொடர்ந்து அணைப்பகுதியில் கனமழை கொட்டி வந்ததால், தண்ணீர் வரத்தும் அதிகளவில் இருந்து வந்தது. மாலை 6 மணி நிலவரப்படி பாபநாசம் அணைக்கு வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அந்த தண்ணீர் முழுவதும் அணையில் இருந்து திறந்து விடப்பட்டது.

சேர்வலாறு அணையில் இருந்தும் வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டு வருவதால், தாமிரபரணி ஆற்றில் நேற்று மாலையில் 25 ஆயிரம் கனஅடி தண்ணீர் வரை வெள்ளமாக ஓடி வருகிறது.

இத்தண்ணீரின் அளவு மேலும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதால், கரையோரப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டு உள்ளனர். மேலும், தாமிரபரணி ஆற்றுப் பகுதியில் மூழ்கியுள்ள தரைப்பாலம் மற்றும் கரையோரங்களில் பொதுமக்கள் வேடிக்கை பார்க்கச்செல்ல வேண்டாம் எனவும் எச்சரிக்கப்பட்டு உள்ளனர்.

**ஆலத்தூர் தாலுகா பகுதிகளில் தொடர் மழை: வேர் அழுகல் நோய் தாக்கி சின்ன வெங்காய பயிர்கள் சேதம் இழப்பீடு வழங்க விவசாயிகள் வேண்டுகோள்**



பாடாலூர்,

ஆலத்தூர் தாலுகா பகுதிகளில் தொடர் மழையால் வேர் அழுகல் நோய் தாக்கி சின்ன வெங்காய பயிர்கள் சேதம் ஏற்பட்டுள்ளது. இதற்கு இழப்பீடு வழங்க விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். சின்ன வெங்காய பயிர்கள்

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா பாடாலூர், இரூர், நாரணமங்கலம், நாட்டார்மங்கலம், செட்டிகுளம், மாவலிங்கை, குரூர், சிறுவயலூர், நக்கசேலம், அடைக்கம்பட்டி, மருதடி, ஈச்சங்காடு, மங்குன் கண்ணப்பாடி, தேனூர், காரை, தெரணி உள்ளிட்ட கிராமங்களில் சுமார் 7,600 ஏக்கரில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்துள்ளனர். இந்நிலையில் பெரம்பலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் அப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட சின்ன வெங்காய பயிர்கள் வேர் அழுகல், குழல் நோய்களால் தாக்கப்பட்டு சேதம் அடைந்துள்ளது. முற்றிலும் பாதிக்கப்பட்டு

இது குறித்து அப்பகுதி விவசாயிகள் கூறுகையில், ஒரு ஏக்கர் சின்ன வெங்காயம் சாகுபடி செய்ய உழவு, அடியுரம், மேலுரம், விதை வெங்காயம், ஆள்கூலி, மருந்து என குறைந்தபட்சம் ரூ,40 ஆயிரம் வரை செலவு செய்யப்பட

வேண்டியுள்ளது. ஆனால், தற்போது பெய்த மழையால் வெங்காயம் முற்றிலும் பாதிககப்பட்டு செலவு செய்த பணத்தைக்கூட எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் கோரிக்கை

மேலும் கடந்த 4 ஆண்டுகளாக மழை இல்லாமல் விவசாயப் பயிர்கள் காய்ந்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. ஆனால், இந்த வருடம் மழை பெய்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட பயிர்களை கணக்கெடுப்பு செய்து விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**தஞ்சை மாவட்டத்தில் தொடர் மழையால் 623 எக்டேர் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின**



தஞ்சை மாவட்டத்தில் தொடர் மழையால் 623 எக்டேர் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. மழை வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. வங்ககடலில் புதிதாக உருவாகி வரும் காற்றழுத்த தாழ்வு நிலையால் மழை விட்டு, விட்டு பெய்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் நேற்று தஞ்சை, திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி, வல்லம், அய்யம்பேட்டை, மஞ்சளாறு, திருவிடைமருதூர்,

கும்பகோணம், அணைக்கரை, பட்டுக்கோட்டை, அதிராம்பட்டினம், பேராவூரணி, மதுக்கூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பலத்தமழை பெய்தது. தஞ்சை மாவட்டத்தில் தற்போது சம்பா, தாளடி நெற்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இதில் தாழ்வான பகுதிகளில் நடவு செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. தண்ணீரில் மூழ்கியுள்ள நெற்பயிர்கள் குறித்தும், அழுகியுள்ள நெற்பயிர்கள் குறித்தும் கணக்கெடுக்கும் பணியில் வேளாண்மைத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று பெய்த மழையினால் தஞ்சை மாவட்டத்தில் பயிர் சேதம் குறித்து கணக்கெடுக்கும் பணி பாதிக்கப்பட்டது. நேற்றுகாலை 11 மணி நேர நிலவரப்படி தஞ்சை மாவட்டத்தில் 623 எக்டேரில் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

நெற்பயிர்கள் அழுகியது . தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் வட்டாரத்தில் 52 எக்டேரிலும், பாபநாசம் வட்டாரத்தில் 36.4 எக்டேரிலும், திருவையாறு வட்டாரத்தில் 211 எக்டேரிலும், ஒரத்தநாடு வட்டாரத்தில் 142 எக்டேரிலும், திருவிடைமருதூர் வட்டாரத்தில் 22.1 எக்டேரிலும், பட்டுக்கோட்டை வட்டாரத்தில் 17.84 எக்டேரிலும், அம்மாப்பேட்டை வட்டாரத்தில் 25 எக்டேரிலும், திருப்பனந்தாள் வட்டாரத்தில் 61.7 எக்டேரிலும், பேராவூரணி வட்டாரத்தில் 10 எக்டேரிலும், தஞ்சை வட்டாரத்தில் 10 எக்டேரிலும், மதுக்கூர் வட்டாரத்தில் 35 எக்டேரிலும் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

தொடர்ந்து தண்ணீர் தேங்கி நிற்பதால் தஞ்சை மாவட்டத்தில் 70.6 எக்டேரில் நெற்பயிர்கள் முழுமையாக அழுகிவிட்டன. தஞ்சை மாவட்டத்தில் திருவையாறு வட்டாரத்தில் 31 எக்டேரிலும், திருவிடைமருதூர் வட்டாரத்தில் 18.2 எக்டேரிலும், ஒரத்தநாடு வட்டாரத்தில் 12 எக்டேரிலும், பட்டுக்கோட்டை வட்டாரத்தில் 9.4 எக்டேரிலும் நெற்பயிர்கள் அழுகிவிட்டன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**தொடர் மழை: நெற்பயிர்கள் மூழ்கியதால் விவசாயிகள் கவலை**

கும்பகோணம் பகுதியில் பெய்த பலத்த மழையால் வயல்களில் தண்ணீர் சூழ்ந்து நெற்பயிர்கள் நீரில் மூழ்கி உள்ளன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

வடகிழக்கு பருவமழை

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததை தொடர்ந்து தஞ்சை மாவட்டம் கும்பகோணம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதியில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் கும்பகோணம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதியில் உள்ள குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பல்வேறு இடங்களில் உள்ள சாலைகளில் மழைநீர் தேங்கி உள்ளது. பலத்த மழையால் கும்பகோணம் அருகே நடவு செய்யப்பட்டுள்ள சம்பா, தாளடி நெற்பயிர்கள் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

காவிரி டெல்டாவின் முக்கிய பகுதியான கும்பகோணம் பகுதியில் மழை பெரிய அளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தற்போது சம்பா பயிர்கள் களை எடுக்கப்பட்டு கதிர் வரும் தருணத்தில் உள்ளன. இந்த நிலையில் மிதமாக மழை பெய்தால் பயிர்கள் நன்றாக செழித்து வளரும். மேலும் இந்த கதிர்கள் நன்றாக மணி பிடித்து நெல்மணிகள் திடமாக வளரும். இதனால் நெல் மகசூல் கூடி அதிக லாபம் கிடைக்கும் என்று, விவசாயிகள் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

விவசாயிகள் கவலை : தற்போது பெய்து வரும் அதிக மழையால் பட்டீஸ்வரம், ஆரியப்படையூர், சோழன்மாளிகை, ஆகிய பகுதியில் உள்ள நெற் பயிர்கள் மூழ்கி உள்ளன. வயல்களில் தேங்கி உள்ள இந்த தண்ணீர் வடிய நீண்ட நாட்கள் ஆகும் என கூறப்படுகிறது. பல வடிகால் வாய்க்கால்களில் துரிர் வாரபடாமல் களைகள் நிறைந்து தண்ணீர் தேக்கி நிற்கும் நிலையில் உள்ளது. மேலும் தண்ணீர் அதிக நாட்கள் வயல்களில் தேங்கினால் பயிர்கள் அழிந்து மகசூல் இழப்பு ஏற்படும். இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தினகரன்

**வாழை சாகுபடியில் ஏற்படும் மகசூல் இழப்பை தடுப்பது எப்படி?**

திருச்சி, : தொடர் மழையால் பெருக்கெடுத்த தண்ணீர் ேதங்கி நிற்பதால் வாழை சாகுபடியில் 25 சதவிகிதம் வரை ஏற்படும் மகசூல் இழப்பை தடுப்பது எப்படி? என்பது குறித்து தேசிய வாழை ஆராய்ச்சி மையம் ஆலோசனை

தெரிவித்துள்ளது. தமிழகத்தில் தற்போது தொடர்ந்து பெய்து வரும் பருவ மழை காரணமாக, சாகுபடி செய்யப் பட்டுள்ள பெருவாரியான வாழைத் தோட்டங்களில் மழைநீர் தேங்கி நிற்க அதிகம் வாய்ப்புள்ளது, இந்த தண்ணீரை தோட்டங்களில் இருந்து வடிக்கும்போது 2 மற்றும் 3ம் தவணையாக இடப்பட்டுள்ள பொட்டாஷ் உரம் தண்ணீரில் கரைந்து வீணாகும் நிலை உருவாகிறது. இதன் காரணமாக வாழைக்கு தேவையான பொட்டாஷ் உரம் சரிவர கிடைக்காத சூழல் ஏற்பட அதிக வாய்ப்புகள் இருப்பதால் வாழையில் 20 முதல் 25 சதம் வரை மகசூல் இழப்பு ஏற்படலாம். இதைத் தவிர்க்க பருவமழை நின்ற உடன், வாழை மரம் ஒன்றுக்கு 100 கிராம் யூரியா, 150 கிராம் மூரியேட் ஆஃப் பொட்டாஷ் மற்றும் 100 கிராம் டோலமைட் (கால்சியம் - மக்னீசி யம் கார்பனேட்) உரங்களை மண்ணில் இடவேண்டும். மேலும், இலை வழியூட்டமாக, 1 சதவிகித பொட்டாஷியம் நைட்ரேட் கரைசலையும் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம்), 1 சதவிகித கால் சியம் நைட்ரேட்டையும் (ஒரு லிட்டர் தண்ணீருக்கும் 10 கிராம்) இலை மேல் தெளிக்க வேண்டும். மேலும், வாழைக்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் நுண்ணூட்டச் சத்துகளும், மழை நீரை தோட்டங்களில் இருந்து வடிக்கும்போது வீணாக வாய்ப்புள்ளது. இதுகுறித்து திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மைய இயக்குநர் பால.பத்மநாபன் கூறுகையில், வாழையில் இழப்புகளை சரிகட்ட, வாழைக்கு நுண்ணூட்டச் சத்துகள் இடுவது மிகவும் அவசியம். இதற்கு, வாழை நுண்ணூட்டக் கலவையான பனானா சக்தியை இரண்டு சதவிகித கரைசலாக (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 20 கிராம்) இலைமேல் தெளிக்கவும். ஒரு கிலோ பனானா சக்தி நுண்ணூட்ட உரத்தின் விலை ரூ.150ஆகும். எனவே வாழை சாகுபடியில், தேங்கி நிற்கும் மழை நீரால் ஏற்படக்கூடும் இத்தகைய பொட்டாஷ் மற்றும் நுண்ணூட்டச் சத்துகளின் இழப்புகளை, மேற்குறிப்பிட்ட முறையில் நிவர்த்திச் செய்து, அதிக மகசூல் பெறலாம். மேலும் விவரங்களுக்கு இயக்குநர், தேசிய வாழை ஆராய்ச்சி மையம், தோகைமலை சாலை, தாயனூர் அஞ்சல், திருச்சி- 620102 என்ற முகவரியில் நேரிலோ அல்லது 93443 53587 என்ற அலைபேசி எண்ணிலும் தொடர்புகொள்ளலாம் என்றார்

**தொடர்மழை பெய்து வருவதால் மாவட்டம் முழுவதும் விவசாய பணிகள் தீவிரம் விவசாயிகள் மகிழ்ச்சி**

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் நெல் விதைப்பு மற்றும் நாற்று நடவு பணிகள் தீவிரமடைந்துள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் சுமார் 1 லட்சத்து 5 ஆயிரம் எக்டேர் நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இதில் ஆண்டுதோறும் அதிகபட்சமாக சுமார் 84ஆயிரம் எக்டேரில் நெல் பயிரிடப்படுகிறது. வடகிழக்கு பருவமழை காலத்தில் சராசரியாக சுமார் 66ஆயிரம் எக்டேர் நிலத்தில் நெல் பயிரிடப்படுகிறது. பல மாவட்டங்களில் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவ மழை பெய்த நிலையில் சிவகங்கை மாவட்டத்தில் போதிய மழை இல்லை.

மாவட்டத்தின் சில பகுதிகளில் கடந்த மாதம், இம்மாத தொடக்கத்தில் பரவலாக மழை பெய்தது. சில பகுதிகளில் மட்டும் கன மழை பெய்தது. ஆனால் கண்மாய்கள் நிரம்பும் வகையில் போதிய மழை இல்லை. மாவட்டத்தில் 10 சதவீத கண்மாய்கள் கூட நிரம்பவில்லை. இதனால் விவசாய பணிகள் தொடங்குவதில் விவசாயிகள் தயக்கம்காட்டி வந்தனர்.

இந்நிலையில் அவ்வப்போது சில பகுதிகளில் பெய்யும் கன மழை மற்றும் கடந்த சில நாட்களாக பெய்து வரும் சாரல் மழையையடுத்து மாவட்டம் முழுவதும் விவசாயிகள் நெல் விதைப்பு மற்றும் நடவு பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். சிங்கம்புணரி, எஸ்.புதூர், சிவகங்கை, திருப்புவனம், திருப்பத்தூர், மானாமதுரை ஒன்றியங்களில் நாற்றங்கால் அமைக்கப்பட்ட நிலையில் நடுகை செய்வதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது அனைத்து பகுதிகளிலும் நடுகை பணிகளை விவசாயிகள் தொடங்கியுள்ளனர். இதுவரை மாவட்டம் முழுவதும் 62ஆயிரத்து 342எக்டேரில் நெல் பயிரிடும் பணி நடந்துள்ளது.

தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் விதைப்பு பணி நடந்து வருகிறது. வைகை அணையில் நீர் திறப்பு மற்றும் பெரியாறு அணையில் அணையின் நீர் மட்டம் 142அடியை எட்டியுள்ளதால் இந்த பாசனப்பகுதிகளில் கூடுதலாக விவசாய

பணிகள் நடக்க வாய்ப்புள்ளது. வேளாண் இணை இயக்குநர் குருமூர்த்தி கூறியதாவது,' போதிய மழை இல்லாததால் விவசாயிகள் விவசாய பணிகளில் தயக்கம் காட்டி வந்தனர்.

இந்நிலையில் தற்போது அவ்வப்போது பெய்து வரும் மழை மற்றும் தொடர்ச்சியாக உள்ள தூறல் மழையை பயன்படுத்தி விவசாயப்பணிகள் தீவிரமடைந்துள்ளது. ஏற்கனவே உள்ள 62ஆயிரம் எக்டேர் விவசாயத்தோடு மேலும் 6ஆயிரம் எக்டேர் வரை நெல் விவசாயம் இருக்கும் என எதிர்பார்க்கிறோம். இந்த காலகட்டத்திற்கான சராசரி நெல் விவசாயத்தை எட்டிவிடும் வாய்ப்புள்ளது. தேவையான விதை, உரம் உள்ளிட்ட அனைத்து இடுபொருட்களும் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன என்றார்.

**மயிலம் வட்டாரத்தில் மழையால் பாதிக்கப்பட்ட விளைநிலங்கள் கணக்கெடுக்கும் பணி துவக்கம்**

மயிலம் வட்டாரத்தில் மழையால் பாதிக்கப்பட்ட விளை நிலங்களை கணக்கெடுக்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டனர். வங்க கடலில் உருவான அடுத்தடுத்த குறைந்த காற்றழுத்த தாழ்வு காரணமாக, விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த ஒரு மாதமாக மழை கொட்டி தீர்த்தது. தாழ்வான பகுதிகளை மழைநீர் சூழ்ந்து ஏராளமானோர் பாதிக்கப்பட்டனர். விளைநிலங்கள் தண்ணீரில் மூழ்கி கிடக்கின்றன. நிவாரண உதவிகளை விரைந்து வழங்க வேண்டுமென விவசாயிகளும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

இதையடுத்து சேத பாதிப்புகளை கணக்கெடுக்கும் பணி நடந்து வருகிறது. மயிலம் வட்டார பகுதிகளான நல்லாமூர், பெரியதச்சூர், பேரணி, மோழியனூர், கொத்தமங்கலம், செண்டியம்பாக்கம், ரெட்டணை, ஆசூர் உள்ளிட்ட பகுதிகளில் மயிலம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் ராஜசேகர் தலைமையிலான குழுவினர் கணக்கெடுப்பு பணியை துவக்கினர். விளை நிலங்களில் மழைநீர் முழுவதுமாக வடிந்தவுடன் சேதம் குறித்து முழு விவரம் தெரிய வருமென உதவி இயக்குனர் ராஜசேகர் கூறினார்.

**96 ஆயிரம் கால்நடைகளுக்கு சிகிச்சை**

கோவை மாவட்டத்தில் கால்நடை பாதுகாப்பு திட்டத்தின் மூலமாக 96 ஆயிரம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் கால்நடை பாதுகாப்பு திட்டம் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் 180 கிராங்களில் உள்ள கால்நடைகளுக்கு மலட்டுதன்மை நீக்க சிகிச்சை, சினைப்பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல், தடுப்பூசி போடுதல், ஆண்மை நீக்கம் செய்தல், குடற்புழு நீக்கம் உள்ளிட்ட சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்முகாம் வரும் பிப்ரவரி மாதம் வரை நடக்கிறது. இதில், தற்போது கால்நடை பராமரிப்பு துறையின் மூலமாக 94 கிராமங்களில் கால்நடை மருத்துவ அலுவலர்கள், கால்நடை நோய் புலனாய்வு பிரிவு அலுவலர்கள் மூலம் முகாம் அமைக்கப்பட்டு தடுப்பூசி போடுதல், சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முகாமின் மூலமாக 96 ஆயிரம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மீதமுள்ள 86 கிராமங்களிலும் கால்நடை பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்தும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இந்த கிராமங்களில் கால்நடை பராமரிப்பு துறையினர் சார்பில் துண்டு பிரசுரங்கள் மற்றும் ஒலிபெருக்கியின் மூலமாக பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. அடுத்த வாரம் முதல் சம்மந்தப்பட்ட கிராமங்களில் கால்நடை பராமரிப்பு துறை அதிகாரிகள் முகாமிட்டு சிகிச்சை அளிக்கும் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர். முகாமிற்கு சராசரியாக ஆயிரம் கால்நடைகள் எனற அடிப்படையில் கால்நடை பாதுகாப்பு திட்டம் செயல்பட்டு வருவதாக கோவை கால்நடை பராமரிப்புதுறை மண்டல இணை இயக்குனர் தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார்.

**சம்பா, தாளடி நெற் பயிர்களுக்கு காப்பீடு செய்ய 15ம்தேதி கடைசி**

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் சம்பா, தாளடி நெற்பயிர்கள் மகசூல் பாதிப்புக்கு உள்ளாகும் வாய்ப்பு உள்ளதால், சம்பந்தப்பட்ட விவசாயிகள், தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இம்மாதம் 15ம் தேதிக்குள் பயிர்களை

காப்பீடு செய்துகொள்ளுமாறு வேளாண் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது. புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை இடர்பாடுகளாலும், பூச்சி நோய்த் தாக்குதலாலும் நெற் பயிர்களின் மகசூலில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இத்தகைய பாதிப்புகளில் இருந்து விவசாயிகளை காக்க தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் திருச்சி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவு கடன் சங்கங்கள், சேவை வங்கிகள் மூலம் பயிர்க் கடன் பெற்றுள்ள விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். கடன் பெறாத விவசாயிகளும் இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்து பயன்பெறலாம். இந்த பயிர் காப்பீட்டுத் திட்டமானது சம்பா நெற் பயிருக்கு, திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயிர் பாதிப்பு ஏற்படும் போது உத்திரவாத மகசூலில் இருந்து நடப்பு பயிரின் மகசூல் எவ்வளவு குறைந்திருக்கிறதோ அதே விகிதப்படி நஷ்டஈடு வழங்கப்படும். இதை கணக்கிட நெற்பயிருக்கு 3 ஆண்டு சராசரி மகசூலும் இதர பயிர்களுக்கு 5 ஆண்டு வருட சராசரி மகசூலும் எடுத்துக்கொள்ளப்படும். வட்டார அளவில் காப்பீடு செய்யப்பட்ட பயிரின் மகசூல் உத்திரவாத மகசூலின் அளவை காட்டிலும் குறைவாக இருந்தால் அந்த பயிரை காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் மகசூல் குறைவு விகிதப்படி இழப்பீடு வழங்கப்படும். இதுகுறித்து திருச்சி மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சந்திரசேகரன் கூறுகையில், பயிர் காப்பீடு செய்வதற்கான பிரிமீயத் தொகையில் கடன் பெறாத சிறு, குறு விவசாயிகளுக்கு 55 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 50 சதவீதமும் மானியத்தை அரசே செலுத்தி விடுவதால் மீதமுள்ள தொகையை செலுத்தி பயிர் காப்பீடு செய்யலாம். சம்பா நெற் பயிரைப் பொருத்தவரையில் ஒரு ஏக்கர் பயிர் காப்பீடு செய்ய கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் ரூ134-ம், இதர விவசாயிகள் ரூ149-ம் செலுத்தினால் போதுமானது. பயிர் காப்பீடு செய்வதற்கான விண்ணப்ப படிவங்களை தங்கள் பகுதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலோ, தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களிலோ பெற்றுக்கொள்ளலாம் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை இம்மாதம் 15ம் தேதிக்குள் உரிய பிரிமீயத் தொகையுடன் சம்மந்தப்பட்ட கூட்டுறவு கடன் சங்கங்கள் அல்லது அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தி இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம் என்றார். லால்குடியில் 22,895 ஏக்கர் திருச்சி மாவட்டத்தில் லால்குடி வட்டாரத்தில்

மட்டும், நடப்பு சம்பா மற்றும் தாளடி பருவத்தில் மொத்தம் 22, 895 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு இருப்பதால் அதிக மழை, வெள்ளம், வறட்சி மற்றும் பூச்சி நோய்களால் ஏற்படும் சேதத்தில் இருந்து காக்க பயிர் காப்பீடு செய்ய வேண்டியது அவசியம். விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள புதூர் உத்தமனூர், வாளாடி, பூவாளுர் மற்றும் அன்பில் வேளாண் விரிவாக்க மையங்களில் களப் பணியாளர்களான உதவி வேளாண் அலுவலர்களை சந்தித்து 14ம் தேதிக்குள் உரிய தொகையுடன் விண்ணப்பிக்குமாறு லால்குடி வட்டார வேளாண் உதவி இயக்குநர் மரியரவி ஜெயக்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

**புதுகை இயற்கை விவசாயிக்கு அமெரிக்க விஞ்ஞானி பாராட்டு**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை அடுத்த முத்துக்காடு கிராமத்தில் பாரம்பரிய நெல் ரகங்களை இயற்கை முறையில் சாகுபடி செய்துவரும் விவசாயிக்கு அமெரிக்க விஞ்ஞானி பாராட்டியுள்ளார். புதுக்கோட்டை அடுத்துள்ள முத்துக்காடு கிராமத்தில் இயற்கை விவசாயியான அப்பாவு பாலாண்டார் என்பவர் கருப்புக்கவுணி, சிவப்புக்கவுணி, பூங்காரி, தங்கச்சம்பா, யானைக்கொம்பன், தூயமல்லி போன்ற பாரம்பரிய நெல் ரகங்களை 10 ஏக்கர் பரப்பளவில் இயற்கை முறையில் பயிரிட்டுள்ளார். இதற்கு மண்புழு உரம், மூலிகைப்பூச்சி விரட்டி, பஞ்சகவ்யம், அமிர்தகரைசல், மீன்அமிலம் போன்ற இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்தி ஒற்றை நாற்று முறையில் நடவுச் செய்துள்ளார்.

ஏக்கருக்கு 2 கிலோ வீதம் விதையை பயன்படுத்தி, விதைப் பயன்பாட்டின் செலவையும் குறைத்து, காய்ச்சலும் பாய்ச்சலும் முறையில் நீர்ப்பாய்ச்சி நீரின் பயன்பாட்டையும் குறைத்து, எவ்வித ரசாயண இடுபொருட்களும் இல்லாமல் மண் வளத்துக்கும், மனித வளத்துக்கும், பல்லுயிர்ச் சூழலுக்கும் தீங்கு இழைக்காத மருத்துவக் குணங்கள் நிறைந்த பாரம்பரிய ரகங்களைப் பயிரிட்டு பாதுகாத்து பரவலாக்கம் செய்து வருகிறார். இதே ஊரான முத்துக்காடு கிராமத்தில் பிறந்து, அமெரிக்காவில் பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டும், உயர் பதவியேற்று பணியாற்றி வரும் டாக்டர் ராஜன் நடராஜன்,

அண்மையில் இக்கிராமத்துக்கு வந்தபோது, இயற்கை முறையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பாரம்பரிய நெல் ரகங்களை நேரில் பார்வையிட்டதோடு, அப்பாவு பாலாண்டாரை பாராட்டி ஊக்குவித்தார்.

**புதுகை மாவட்டத்தில் சம்பா, தாளடி நெற் பயிர்களைத் தாக்கும் இலைக்கருகல் நோயை கட்டுப்படுத்தலாம் வேளாண் துறை ஆலோசனை**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் நெற் பயிர்களைத் தாக்கும் இலைக்கருகல் நோயை கட்டுப்படுத்தலாம் என வேளாண் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், திருவரங்குளம், புதுக்கோட்டை, மணல்மேல்குடி வட்டாரங்களில் பரவலாக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றில் இலை கருகல் நோய்த் தாக்கும் அபாயம் உள்ள போதும், இவற்றை கட்டுப்படுத்தலாம் என வம்பன் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ஞானமலர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கடந்த 2 வாரங்களாக பெய்து வரும் மழை மற்றும் மேகமூட்டமான சீதோஷ்ண நிலையால் நெற்பயிர்களில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதைத் தொடர்ந்து, தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிலைய தலைவரின் அறிவுரையின் படி, வம்பன் வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருக்கிணைப்பாளர் மணிமேகலை, நோயியல் விஞ்ஞானி மதியழகன் மற்றும் வேளாண் அலுவலர்கள் இதுகுறித்து கள ஆய்வு மேற்கொண்டனர். இதில் சில பகுதிகளில் நெல்லில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் தென்பட்டது தெரியவந்தது.

இருப்பினும், இந்த பாக்டீரியா இலைக்கருகல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தலாம். பொதுவாக இந்நோய் நாற்றாங்காலில் நாற்றுகளைத் தாக்குவதுடன் நடவு வயலில் வளர்ச்சியுற்றிருக்கும் நெற்பயிரையும் தாக்குகிறது. அதிக ஈரப்பதம் தொடர்ந்து பலநாட்கள் இருக்கும் போது இந்நோய் வேகமாகப் பரவி நெற்பயிரைத் தாக்கி சேதப்படுத்துகிறது. இது விதை, தண்ணீர் மற்றும் மண் மூலமும் பரவுகிறது. மழைத் தண்ணீர் அதிகமாகத்

தேங்குவதால், சூறாவளி 25 மற்றும் 39 சதவிகித அளவு வெப்ப நிலை, அதிக அளவில் தழைச்சத்து இடுதல் மற்றும் நாற்றுக்களைக் கிள்ளி நடுதல் ஆகியன இந்நோய் பரவ காரணமாக உள்ளன. நெற்பயிர் இல்லாத காலங்களில் களைச் செடிகளான லீர்சியா ஹெக்சான்ட்ரா, குதிரைவாலி, எறுமைப்புல் ஆகியவற்றையும் இந்நோய் தாக்கி பரவுகிறது. நோயின் அறிகுறிகளாக நெற்பயிரின் அடி மட்டத்தில் உள்ள இலைகளின் ஓரங்களில் உருண்டை வடிவில் உள்ள புள்ளிகள் தோன்றும், இப்புள்ளிகள் மேலும் நீண்டு அகலாமாகியும் பெரிதாக வளரும். இதன் ஓரங்கள் அலை போன்ற அமைப்பு இருக்கும். பின் மஞ்சளாக மாறி முடிவில் காய்ந்து விடும். இலைகள் முற்றிலுமாக காய்ந்து கருகியவுடன் அந்த இலைகளின் மேல் சாறுண்ணி பூசணங்கள் வளருவதால் இலைகள் சாம்பல் நிறத்துடன் காணப்படும். இலையின் ஆரோக்கியமான பாகத்தின் பக்கத்தில் நீர்க்கோர்வை ஏற்படும். இதன் பக்கத்தில் ஏதேனும் காயம் ஏற்பட்டால் உடனடியாக அதன் மூலம் இந்நோய் தாக்கி புள்ளிகள் தோன்ற ஆரம்பிக்கும். பின் இலையின் முழுப்பரப்பையும் பாதித்துவிடும். இலையின் மேல் பாகத்தில் இளம் புள்ளிகளில் பால் போன்ற ஒளிபூக முடியாத பனித்துளிகளில் அதிகாலையில் பாக்டீரியா நோய்க் கிருமிகளைக் காணலாம்.

கட்டுப்படுத்தும் வழிமுறை: இந்நோய்த் தாக்குதல் ஏற்படாமல் இருக்க முதலில் நோய் எதிர்ப்பு ரகங்களைப் பயிரிட வேண்டும். நடும் போது நாற்றுகளின் நுனியைக் கிள்ளக்கூடாது, உரங்களை கவனத்துடன் இடவேண்டும். நோய் தாக்கிய வயல்களில் தழைச்சத்து உரங்களை பிரித்து இடுவது அல்லது குறிப்பாக நோய் அதிகமாகத் தாக்கிய வயல்களில் மேலுரம் இடாமல் இருப்பது நன்மை பயக்கும். நோய் தாக்கப்பட்ட வயலில் இக்காத வயலுக்கு பாய்ச்சக் கூடாது. நோயின் அறிகுறி தென்பட்டவுடன் 40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் இரவு முழுவதும் ஊறவைக்க வேண்டும். மறுநாள் காலையில் தெளிந்த பசுஞ்சாணக் கரைசலை வடிகட்டி அதனுடன் மொத்த கொள்ளளவான 200 லிட்டர் கரைசலை தயார் செய்து 1 ஏக்கருக்கு இலைவழியாக கைதெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும், பசுஞ்சாணக் கரைசலை தெளிப்பதன் மூலம் இந்நோயை கட்டுப்படுத்தலாம்.

500 கிராம் செப்ரோ மைசின் சல்பேட், 300 கிராம் டெட்ரா மைசின், 1250 கிராம் காப்பர் ஆக்ஸிகளோரைடு மருந்தினை ஒரு எக்டரில் ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிப்பதன் மூலமும் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம். அதேபோல் 1250 கிராம் காப்பர் ஹைட்ராக்சைடு 77கிராம் மருந்தினை ஒரு எக்டேரில் தெளிப்பதன் மூலமும் கட்டுப்படுத்தலாம். அத்துடன் நல்ல மகசூலையும் விவசாயிகள் எதிர்பார்க்கலாம். மேலும் விவரங்களை வம்பன் அறிவியல் நிலையத்தில் நேரடியாக அல்லது அலுவலக தொலைபேசி எண் 04322 296447, 290321 மற்றும் நோயியல் உதவிப் பேராசிரியர் மதியழகன் 99445 20544 ஆகிய தொலைபேசி, அலைபேசி எண்களில் தொடர்புகொண்டு தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

திருச்சுழி, : கோவிலாங்குளத்தில் நெல் சாகுபடி பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம் நடந்தது.எம்.ரெட்டியபட்டி வட்டாரம் விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் நடந்த முகாமுக்கு வேளாண் துணை இயக்குநர் பாலமுருகன் தலைமை தாங்கினார். வேளாண் உதவி இயக்குநர் நாச்சியாரம்மாள் முன்னிலை வகித்தார். கோவிலாங்குளம் மண்டல ஆராய்ச்சி நிலையத் தலைவர் பால்பாண்டி, மண்ணியல்துறையைச் சேர்ந்த டாக்டர் சரவணபாண்டி நெல் சாகுபடி செய்வது குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயலட்சுமி, மாரீஸ்வரி ஆகியோர் நெல்சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்தனர். தொழில்நுட்ப மேலாளர் முத்துக்கருப்பன் நன்றி கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**தமிழகத்துக்கு 100 டன் பால் பவுடர், 50 ஆயிரம் போர்வைகள் வழங்கப்படும்: கர்நாடக முதல்வர் சித்தராமையா அறிவிப்பு**



தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு ரூ. 5 கோடி நிதியுதவியை தொடர்ந்து 100 டன் பால் பவுடர், 50 ஆயிரம் போர்வைகள் கர்நாடக அரசு சார்பாக அனுப்பி வைக்கப்படும் என அம்மாநில முதல்வர் சித்தராமையா அறிவித்துள்ளார். கடந்த 2-ம் தேதி கர்நாடக முதல்வர் சித்தராமையா தமிழகத்தில் வெள்ளத்தில் சிக்கி யுள்ள சென்னை, திருவள்ளூர், கடலூர் உள்ளிட்ட இடங்களுக்கு கர்நாடக அரசு சார்பாக ரூ. 5 கோடி வழங்கப்படும் என அறிவித்தார். இதனை தமிழக அதிகாரிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பெற்றுக்கொண்டனர். இந்நிலையில் முதல்வர் சித்தராமையா பெங்களூருவில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கர்நாடக அரசு அதிகாரிகள் தமிழக அரசுடன் பேசிய போது தற்போது பால், பால் பவுடர் மற்றும் போர்வை தட்டுப்பாடு உள்ளதாக தெரிவித்துள்ளனர். எனவே கர்நாடக பால் உற்பத்தி யாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் ரூ. 1.5 கோடி மதிப்பில் 100 டன் பால் பவுடர் வழங்க உத்தர விடப்பட்டுள்ளது. இதே போல 50 ஆயிரம் போர்வைகள் மற்றும் பால் பாக்கெட்டுகள் உள்ளிட்ட நிவாரணப் பொருள்களையும் உடனடியாக அனுப்பி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார். பெங்களூரு மாநகராட்சி சார்பாக 198 கவுன்சிலர்களும் தங்களின் ஒரு மாத ஊதியத்தை வெள்ள நிவாரணமாக வழங்க முடிவெடுத்துள்ளனர். இதே போல பெங்களூரு மாநகராட்சியில் பணியாற்றும் ஊழியர்களும் தங்களது ஒரு நாள் ஊதியத்தை தமிழகத்துக்கு வழங்கப்போவதாக அறிவித் துள்ளனர்.

மாலைமலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**பூண்டி ஏரியில் இருந்து மீண்டும் தண்ணீர் திறப்பு: வினாடிக்கு 3,169 கனஅடி திறந்து விடப்படுகிறது**



சென்னை நகர மக்களுக்கு குடிநீர் வழங்கும் பிரதான ஏரிகளில் ஒன்றான பூண்டி ஏரியில் கடந்த மாதம் 8-ந் தேதி நீர்மட்டம் 17 அடியாக இருந்தது. வெறும் 76 மில்லியன் கனஅடி தண்ணீர் மட்டுமே இருப்பு இருந்தது. இந்த நிலையில் 8-ந் தேதி முதல் பெய்த கனமழை காரணமாக 3 நாட்களில் அணை முழுவதுமாக

நிரம்பியது. இதனால் ஏரியில் இருந்து வினாடிக்கு 34 ஆயிரம் கனஅடி வீதம் குசஸ்தலை ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இதனால் ஆற்றின் கரை ஓரங்களில் உள்ள ஆட்ரம்பாக்கம், ஒதப்பை, மோவூர் உள்ளிட்ட 82 கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. அதன்பின்னர் மழை படிப்படியாக குறைந்ததால் நீர் வரத்து வெகுவாக குறைந்தது. இதையொட்டி நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு தண்ணீர் திறப்பு முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. 16 ஷட்டர்களும் மூடப்பட்டன. இந்நிலையில் ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகமாக உள்ளதால் நேற்று இரவு 7 மணிக்கு மீண்டும் ஏரியில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. வினாடிக்கு 3,169 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. ஏரிக்கு வினாடிக்கு 2,885 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. இரவு 8 மணி நிலவரப்படி பூண்டி ஏரியில் நீர் மட்டம் 33.35 அடியாக பதிவானது. 2,624 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு இருந்தது.

**'வெள்ள நிவாரண பெற ரேஷன் கார்டு இல்லாவிட்டாலும் பிரச்னை இல்லை!'**



**சென்னை:** வெள்ள நிவாரணம் பெற பொது மக்கள் தங்களது குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றை காண்பிக்க வேண்டும். அவை சேதம் அடைந்திருந்தாலோ அல்லது மழை நீரில் அடித்து செல்லப்பட்டிருந்தாலோ தகவலை மட்டும் கணக்கெடுக்கும் அலுவலர்களிடம் தெரிவித்தால்போதும் என்று சென்னை மாவட்ட ஆட்சியர் தெரிவித்து உள்ளார்.

வெள்ள நிவாரண நிதி வழங்குவதற்கான கணக்கெடுப்பு தொடங்கியது. குடும்ப அட்டை-வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் இல்லாவிட்டாலும், இதுகுறித்த தகவலை கணக்கெடுக்கும் அதிகாரியிடம் தெரிவித்தால் போதும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மழை-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு குடிசை வீடுகளை இழந்தோருக்கு ரூ.10 ஆயிரமும், நிலையான வீடுகளில் வசித்து மழை-வெள்ளத்தால் பாதித்தோருக்கு ரூ.5 ஆயிரம் அளிக்கப்படும் என்றும், அவர்களுக்கு 10 கிலோ அரிசி, விலையில்லா வேட்டி-சேலை வழங்கப்படும் என்றும் முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதை தொடர்ந்து, பாதிக்கப்பட்டவர்கள் குறித்த கணக்கெடுக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளன. இதுகுறித்து சென்னை மாவட்ட ஆட்சியர் சுந்தரவல்லி அளித்துள்ள தகவலில், "வெள்ள நிவாரண கணக்கெடுப்பு களப் பணியில் 21 மாவட்டங்களைச் சேர்ந்த 3 ஆயிரம் அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் சென்னை மாவட்டத்தின் 10 வட்டங்களில் உள்ள திருமண மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பணிகளை மேற்பார்வையிட ஒரு சார் ஆட்சியர், 21 மாவட்ட வருவாய் அலுவலர்கள், 21 துணை ஆட்சியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்படும். சம்பந்தப்பட்ட பகுதிகளுக்குச் செல்லும்போது, பொது மக்கள் தங்களது குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றை காண்பிக்க வேண்டும். இவை சேதம் அடைந்திருந்தாலோ அல்லது அடித்து செல்லப்பட்டிருந்தாலோ தகவலை மட்டும் கணக்கெடுக்கும் அலுவலர்களிடம் தெரிவித்தால் போதும்.

பாதிக்கப்பட்டோருக்கு வங்கி சேமிப்பு கணக்கு இல்லாவிட்டால், தனியாக சேமிப்புக் கணக்கு தொடங்கப்படும். வீடுகள் பூட்டப்பட்டு இருந்தால், கணக்கெடுக்கும் அலுவலர் அந்த வீட்டினை மறுகணக்கீடு என குறிப்பார். பிறகு, மீண்டும் கணக்கீடு செய்யப்படும். சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் 100 சதவீதம் முழுமையான கணக்கீடு பணி மேற்கொள்ளப்படும். அதனால், வெள்ள நிவாரண கணக்கெடுப்புப் பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்" என்று தெரிவித்து உள்ளார்.